விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 06 திங்கட்கிழமை (22.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308

## இலங்கையின் அறிக்கை தொடர்பில் சர்வதேசத்திடமிருந்து கேள்விக்கணை

### முதலாம் திகதி ஐ.நா. மீளாய்வுக் கூட்டம்

(ஜெனிவா)

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறவுள்ள பூகோள கால மீளாய்வுக் கூட்டத்துக்காக, இலங்கை சமர்ப்பித்த அறிக்கை தொடர்பாக பல்வேறு நாடுகளும் கேள்விகளை எழுப்பியுள்ளன. (20ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி மகிந்த எமிரேட்ஸ் பயணம்

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை பயணமானார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இன்று திங்கட்கிழமை முதல் 24ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ள உலக சக்தி மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு விஜயம் செய்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

### நவுரு தீவில் இன மோதல்


(கொழும்பு)

இலங்கையர்கள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நவுரு தீவில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் தற்போது அடிக்கடி இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளைச் சேர்ந்த பலர் இங்குள்ள முகாமில் தடுத்து (20ஆம் பக்கம் பார்க்க)

### அரசுடன் பேச ரணில் தயார்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித் துறை ஆகியவற்றிற்கு இடையில் தொடரும் மோதலை தீர்ப்பதற்



காக அரசாங்கத்துடன் பேச்சு நடத் ஐக்கிய தேசிய கட்சி தயார் என எதிர்க்கட்சி (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மனிதவுரிமை விவகாரத்தில் சீனாவும் ரஷ்யாவும் மெத்தனப்போக்கு!

### மனிதவுரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ரஷ்யாவும் சீனாவும் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து மெத்தனமான போக்கை பின்பற்றியதாக மனிதவுரிமை கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இலங்கையில் மனிதவுரிமை மீறல்கள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன எனினும், இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பக்க சார்பற்ற சுயாதீன் விசாரணை நடத்தும் முனைப்புக்களை சீனாவும், ரஷ்யாவும் தடுத்து நிறுத்தியதாக மனிதவுரிமை கண்காணிப்பகத்தின் சர்வதேச நீதிப்பிரிவு பணிப்பாளர் ரிச்சட் டிக்கர் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

### ஹஜ் யாத்திரை சென்ற இலங்கையர் மரணம்

(கொழும்பு)

புனித ஹஜ் கடமைக்கு சென்றுள்ள இலங்கை ஹாஜி ஒருவர் மக்காவில் இறந்துள்ளதாகவும் மேலுமொரு ஹாஜியானி கோமாவில் இருப்பதாக அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து புனித இடமான மக்காவிற்கு செல்லும் ஹாஜிகளுக்கு அனைத்து வசதிகளும் (20ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை அகதிகள் 130 பேருக்கு இந்திய குடியுரிமைச் சான்றிதழ்

(சென்னை)

இராமேஸ்வரம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளில் 50 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்களும் 130 பேருக்கு குடியுரிமைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 60 பேருக்கு இலங்கை கடவுச் சீட்டுக்களையும் இலங்கை அரசாங்கம் நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் தமிழ் உத்தியோகபூர்வமான மொழியாக காணப்படாதபோதே இந்த அகதிகள் தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் அகதிகளாக தஞ்சம் கோரியுள்ளதாக பிரதி உயர்ஸ்தானிகர் ஆர்.கே.எம். ராஜ்கருணா தெரிவித்துள்ளார். (ஏ-11)

### ஜனாதிபதிக்கான செலவாக நாளொன்றுக்கு 2 கோடி

#### 2013 வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒருநாள் செலவாக 2 கோடி ரூபாயை ஒதுக்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் ஜனாதிபதியின் ஆண்டுச் செலவாக 740 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி மகிந்தவின் குடும்பத்தினருடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களினதும் மற்றும் அவரது நெருங்கிய (20ஆம் பக்கம் பார்க்க)

### திவிநெகும சட்டமூலத்துக்கு மு.கா. ஆதரவளிக்காது

(கொழும்பு)

திவிநெகும எனப்படும் வாழ்க்கை மேம்பாட்டு சட்டமூலம் மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிக்கும் வகையில் அமைந்துள்ளதால், அதற்கு தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இந்த சட்ட மூலத்தில் உள்ள சில விடயங்களை ஏற்றுக்கொள்வதாக இருந்த போதும் அது மாகாண சபைகளின் அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பறித்துக் கொள்ளும் வகையில் அமையக் கூடாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது அதற்கு ஆதரவாக வாக்களித்த (20ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வாக்கெடுப்பு

### ஜனாதிபதிக்கு வீரவன்ச ஆலோசனை

(கொழும்பு)

13ஆம் திருத்தச்சட்டத்தை ரத்து செய்வது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் விமல் வீரவன்ச ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். 13ஆம் திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டை பலவந்தமான அரசியல் நெருக்கடிக்கு இட்டுச்செல்ல முயற்சிக்கப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)



சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்
விற்பனைக்கு பிந்திய இலவச சேவைகள்




72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்




100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்




80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்




4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN
~~Rs. 145000/=~~
Rs. 130500/=

ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொடிகாமம், பரித்தித்துறை
தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்
சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசாங்கத்தை ஆதரிப்பதால் அபிவிருத்திகளை செய்ய முடிகிறது

## பிரபா கணேசன் தெரிவிப்பு

அரசாங்கத்தை ஆதரித்து நின்று இன்று பல தமிழ்ப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு முடிந்துள்ளது. எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்திருந்து இதனை செய்திருக்க முடியுமா என முகத்துவாரம் இந்துக் கல்லூரியின் கணித விழாவில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பிரபா கணேசன் கேள்வி எழுப்பினார்.

தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

இன்று கொழும்பு மாவட்டத்தில் பல தமிழ் பாடசாலைகளின் கட்டடங்கள் என்மூலம் கட்டப்பட்டு தளபாட பற்றாக்குறை நீக்கப்பட்டு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டு அபிவிருத்தி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இவை அனைத்தையும் செய்யக்கூடியதற்கான காரணம் நான் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதே ஆகும். அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதும் அரசாங்கத்துடன் இணைந்துதிருப்பதென்பதும் இரண்டு விடயமாகும் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கத்துடன் இணைந்து எனது சுய கௌரவத்தை நான் இழக்க விரும்பவில்லை. ஆனால் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து எனது மக்களின் கல்வியை வளர்ப்பதற்கான வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்கின்றேன். இது பிழை என்றால் எது சரி என்று நான் கேட்டு கொள்ள விரும்புகின்றேன்.

அரசாங்கத்தின் இன்றைய தமிழ் மக்களின் எதிரான போக்கிற்கு எதிர்க் கட்சியிலிருந்து குரல் கொடுப்பவர்களை நான் மதிக்கின்றேன். ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இதனை சரிவர செய்கின்றார் என நான் உணர்கின்றேன். அவரிற்கு பின்னால் பத்தோடு பதினொன்றாக நான் நிற்பதனால் மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை.

அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதன் மூலம் எமது மக்களுக்கானபணிகளை செவ்வனே செய்யக்கூடிய வாய்ப்பு எனக்கு கிட்டியுள்ளது. குறிப்பாக தமிழ்க் கல்வி சமூகத்திற்கு சேவையாற்றக்கூடிய வசதிகள் அரசாங்கத்திடமிருந்து எனக்கு பெறக்கூடியதாக உள்ளது. இதனை தலைநகர தமிழ்ச் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (எ-11)

# கூட்டமைப்பு விசேடமாக நாளை கூடுகிறது

முரண்பாடுகளை களையும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாளை இந்த விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

கட்சியைப் பதிவு செய்வது தொடர்பில் எழுந்துள்ள பிணக்குகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

கட்சியை பதிவு செய்வது தொடர்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளுக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (எ-11)

# இலங்கை பணிப்பெண்கள் சவுதியில் துன்புறுத்தல்

(றியாத்)

சவுதி அரேபியாவுக்கு பணிப் பெண்களாகச் சென்று பல்வேறு துன்புறுத்தல்களுக்குப் பின்னர் எஜமானரிடம் இருந்து தப்பி வந்த 400 இற்கும் அதிகமான இலங் கைப் பணிப் பெண்கள் உலேய்லா நகரில் உள்ள முகாமில் தங்கியுள்ளனர்.

தங்களை நாடு திரும்ப உதவுமாறு குறித்த பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களை உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான சட்ட நடைமுறைகள் தமது நாட்டில் இல்லையென்று சவுதிக்கான இலங்கைத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள் பாதுகாப்பு அமைப்புகளிடம் கையளிக்கப்பட்டு அவர்கள் ஊடாகவே நாடு திரும்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் இன்னும் தாம் அறிந் திருக்கவில்லையென்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் அமல் சேனாதிலங்கார கூறினார்.

முகாமில் தங்கியுள்ள பெண்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்(எ-11)

# காவி உடை அணிந்து பிச்சை எடுத்த நபர் கைது

சிலாபம் முன்னேஸ்வரம் கோவிலுக்கு அருகில் பௌத்த பிக்குகள் அணியும் காவி உடையுடன் பேசக்கூடிய ஆற்றலிருந்தும் தான் ஊமை என்றுகூறி பிச்சை எடுத்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மக்களை ஏமாற்றி பிச்சை எடுத்துக்கொண்டிருந்தவேளை சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் சிலாபம் முன்னேஸ்வரம் கோவிலுக்கு அருகிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்து சிலாபம் மற்றும் சிலாபத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மக்களை ஏமாற்றி பிச்சை எடுத்துவந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் மொரட்டுவ, லுணாவ பிரதேசத்திலுள்ள விகாரையொன்றில் தங்கியிருந்ததாக கைதுசெய்யப்பட்ட நபர் கூறியுள்ளார். இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் அந்த தகவலும் பொய்யான தகவல் என்று அறிந்து கொண்டுள்ளனர். (எ-11)

# இலங்கையின் கோரிக்கை இந்தியாவால் நிராகரிப்பு

அணுத் திட்டம் குறித்த இலங்கையின் கோரிக்கையை இந்திய அரசாங்கம் நிராகரித்துள்ளது. அணுப் பாதுகாப்பு குழுவில் இலங்கையர்களையும் உள்வாங்கிக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியாது என இந்தியா அறிவித்துள்ளது.

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பிலான பாதுகாப்பு குழுவில் இலங்கையர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டிருந்தது.

எனினும் ஆபத்துக்களின்போது துரிதகதியில் எச்சரிக்கைகள் விடுக்கப்படும் என இந்தியா உறுதியளித்துள்ளது.

இதேவேளை அணு மின் நிலையம் தொடர்பில் உன்னிப்பாக கண்காணிக்கப்படும் என இலங்கை அறிவித்துள்ளது. (எ-11)

# 17 அடி பள்ளத்தில் பஸ் பாய்ந்தது

ஹற்றனிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த அரச பேருந்து ஒன்று வட்டவளை சிங்கள பாடசாலைக்கு அருகில் விபத்திற்குள்ளானதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பேருந்து 17 அடி பள்ளத்தில் கவிழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் 12 பேர் காயமடைந்த நிலையில் வட்டவளை மாவட்ட மருத்துவமனையில் அனுதிக்கப்பட்டுள்ளனர். எனினும் உயிர்ச் சேதங்கள் எவையும் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. கினிகத்தேனை-ஹட்டன் பிரதான பாதையில் நேற்று மாலை 5 மணியளவில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. (எ-11)

# தமிழக மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல்!

## தமிழக ஊடகங்கள் தெரிவிப்பு

(சென்னை)

இராமேஸ்வரம் அருகே மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் திடீர் தாக்குதல் நடத்தியதாகவும், இந்தத் தாக்குதலை அடுத்து நான்கு மீனவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் இந்திய ஊடககங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீனவர்கள் 600 இற்கும் மேற்பட்டோர் விசைப் படகில் நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர்.

தனுஷ்கோடி கச்சதீவு நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதன்போது மீன்களைப் பறித்தும் மீன் வலைகளையும் சேதப்படுத்தினர்.

இதனால் உயிருக்குப் பயந்து பாதியிலேயே மீனவர்கள் தங்களது படகுகளை இராமேஸ்வரம் நோக்கி திருப்பிச் செலுத்தினர்.

நேற்றுக் காலை அனைத்துப் படகுகளும் வந்த நிலையில், 1064 என்ற எண்ணுள்ள படகில் சென்ற 4 மீனவர்கள் மட்டும் இன்னும் கரைக்குத் திரும்பவில்லை.

அவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறை பிடித்துச் சென்றனரா? அல்லது கடலில் திசை மாறி எங்காவது சென்றுவிட்டார்களா என்பது தெரியவில்லை.

அவர்களைத் தேடும் பணி தொடங்கியுள்ளது என்று தமிழக தகவல்கள் தெரிவித்தன. (எ-11)








# மரண அறிவித்தல்

## சின்னவன் தம்பன் (தம்பு)

(நல்லூர் பிரதேச சபை ஊழியர்)



தம்பனையை பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் தம்பன் (தம்பு) அவர்கள் 21.10.2012 (ஞாயிற்றுக்கிழமை) நேற்றுக் காலமானார்.

அன்னார் அந்தோனியாப்பிள்ளையின் (மரகதம்) அன்புக் கணவரும், மயூரன், ரிஷவதனி, டிஷாந்தன், கல்பனா, ஜெலன், ஜெலனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சி.சுகந்தனின் (நெடுங்கேணி பிரதேசசபை ஊழியர்) பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.10.2012 (திங்கட்கிழமை) இன்று காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
0755118716

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மைத்துனர்மார்,
சகோதரர்கள்.

(804)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தலைமுறை இடைவெளி

“தாத்தா கூப்பிடுகிறார்; என்னவென்று போய் கேள்”-என்று அம்மாவின்குரல் ஒலிக்கிறது.

“அவர் அப்படித் தான் கூப்பிட்டுக் கொண்டு இருப்பார்;வேறு வேலை இல்லை. வேண்டுமென்றால் நீங்கள் போய் விடயத்தை அறிந்து கொள்ளுங்கள்” என்றான் பையன்.

அந்தப் பையனை மெதுவாக அருகில் அழைத்து “ஏம்பா! பெரியவர்கள் அழைத்தால் போய் என்னவென்று கேட்க வேண்டும். அதுதான் மரியாதை” என்று அட்வைஸ் செய்தேன்.

அவன் உடனே திரும்பி எனக்கு ‘‘அட்வைஸ்’’ செய்ய ஆரம்பித்து விட்டான்.

“விபரம் தெரியாமல் பேசாதீர்கள் சேர்! எங்கள் தாத்தாவிடம் நீங்கள் போய் கதைத்துப் பார்த்தால் தெரியும்” என்றான்.

“ஏம்பா! அப்படி சொல்கிறாய்” என்றேன்.

“பிறகு என்ன சேர்! எப்போது பார்த்தாலும் “நொய்! நொய்” என்று சத்தம் போடுகிறார்.

“நான் 1940 இலே மைசூரிலே வேலை பார்த்தேன்...... எனத் தொடங்கினால், அப்படி, இப்படியென்று சொல்லுவார். ஒரு வரியை அடிக்கடி மாற்றாமல் திரும்பத்திரும்ப கூறுவார். அதைக் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருக்கிற எங்களுக்கு அலுத்துப் போய் விடும்.

நான் உடனே ‘‘இப்போது அட்வைஸ்’’ தேவைப்படுவது பையன்களுக்கு இல்லை தாத்தாக்களுக்குத் தான் என்று புரிந்து கொண்டேன்.

அதனாலே தான் தாத்தாக்களுக்கு இன்றைக்கு இந்த தகவலைச் சொல்ல ஆரம்பித்தேன்.

இந்தக் காலம் மிகவும் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் காலமாக மாறியுள்ளது. அதனால் உங்களின் காலங்களில் (கடந்த காலம்) நடந்தவற்றைத் திரும்பத்திரும்ப சொல்லிக் கொண்டு பெருமை யடித்துக் கொள்ளாதீர்கள். அதை இந்தக் காலத்து இளவட்டுக் கள் நீண்ட நேரத்துக்கு சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

எப்போதும் நீங்களே மற்றவர்களுடன் கதைத்துக் கொண்டு இருக்காதீர்கள். உங்கள் வீட்டிலேயே இருக்கும் மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

நீங்கள் ஒரு ‘‘அட்வைசராக’’ இருக்கவேண்டுமே தவிர “அறுவை”யாக இருக்கக்கூடாது.

வீட்டிலே இடம்பெறும் அனைத்துக் காரியங்களிலும் பங்கேற்றுக் கொள்ளுங்கள். ஆனால் எதிலேயும் தலையீடு செய்யாதீர்கள்; யாரையும் தண்டிக்காதீர்கள்; கேலி செய்யாதீர்கள்.

நீங்கள் வாலிப வயதிலே ஒரு பெரிய தொழிலிலே இருக்கும் போது பல பேர் உங்கள் உத்தரவுக்கு உடனடியாக கீழ் பணிந்திருக்கலாம்.

வேலையிலிருந்து ஓய்வு கிடைத்தவுடன் அந்த அதிகாரத்தை வீட்டிலே பிரயோகிக்காதீர்கள். பழைய மாதிரியான மரியாதையை நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

அதிகார தோரணையையெல்லாம் ‘‘ரிட்டயர்’’ ஆன கையுடன் விட்டுவிடுங்கள். எல்லோருடனும் பணிவாக பேசுங்கள். உங்கள் மரியாதை தானாக உயரும்.

பணியில் இருந்து “ஓய்வு” என்பது நீங்கள் செய்த தொழிலில் இருந்து ஓய்வு என்று தான் அர்த்தம். அதற்காக அனைத்திலும் இருந்து ஓய்வெடுத்தது என்பது அர்த்தமல்ல.

இவ் ஓய்வின் பின் தான் உங்கள் வீட்டுக் காரியங்களில் கூடிய கரிசனை எடுக்கவேண்டும். பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கடைசி வரையும் எமது உதவிகளை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

காய்கறி வாங்குவதற்கு சந்தைக்கு செல்வது, பேரப்பிள்ளைகளுக்கு பாடம் கற்பித்துக் கொடுப்பது போன்ற ஒத்தாசைகளை செய்யவேண்டும்.

இன்னொரு முக்கியமான விடயம். உங்களுக்கு வயதாகி விட்டதே என்பதற்காக உடை வகைகளில் கவனமில்லாமல் இருக்காதீர்கள். தாடியும் மீசையுமாக இருக்காதீர்கள்.

இளமையில் எப்படி இருந்தீர்களோ அப்படியே நன்றாக உடை அணிந்து அழகாக சுத்தமாக இருங்கள்.

பாட்டியே உங்கள் அழகில் வியக்கும் அளவில் நீங்கள் இருக்கவேண்டும்.

இந்தக் காலத்திலும் கூட வியக்க வைக்கும் அளவிற்கு பல வயதான தம்பதிகள் சந்தோஷமாக இருக்கிறார்கள் தெரியுமா?

தற்போது இருக்கும் இளம் வயதுப் பிள்ளைகளின் எதிர் காலம் எப்படி அமையும்? இந்தக் காலத்தில் அந்த [illegible] கிடைக்குமா? என்பது கே[illegible]

# தமிழியல் விருது வழங்குவதற்காக நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டுதோறும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கை தமிழ்ப்படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழியல் விருதும் பணமும் வழங்கி கௌரவித்து வருகின்றது.

இதற்கமைய இவ் ஆண்டு தமிழியல் விருதுக்கான நூல்களை தேர்வு செய்ய படைப்பாளிகளிடமிருந்து நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதில் எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே.பாக்கியநாதன் உயர்தமிழியல் விருது, வவுனியூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா கமலநாயகி தமிழியல் விருது, ஓவியர் கிக்கோ தமிழியல் விருது என்பனவே வழங்கப்படவுள்ளன.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கையை தாயகமாக கொண்ட படைப்பாளிகள் 2011 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி முதல் மார்கழி 31 ஆம் திகதி வரை வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை, குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், விடலை இலக்கியம், நாடகம், அறிவியல், ஆய் வியல், வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, இனமத நல்லுறவு இலக்கியம், தொழில்நுட்பம் போன்ற பலதுறை சார்ந்த நூல்களை தேர்வுக்காக அனுப்பி வைக்க முடியும்.

தேர்வுக்காக வந்து சேரும் நூல்களில் இருந்து 2011 இல் வெளிவந்த சிறந்த நூல்கள் நீதியானதும் சுதந்திரமானதுமான துறைசார் நடுவர் குழுவினால் தமிழியல் விருது 2012 க்காக தேர்வு செய்யப்படும்.

தேர்வுக்காக பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயமாக தயாரிக்கப்பட்ட விபரத்துடன் நூலின் 4 பிரதிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்.

ஒரு படைப்பாளி எத்தனை வகையான படைப்புகளையும் அனுப்பி வைக்கலாம். பணமும் தமிழியல் விருதும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்படும். இந்நூல்களை டாக்டர் ஓ.கே.குணநாதன், மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 077 6041503 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது okkuna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும். (அ-9)

# கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யா/ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் கலைவிழா நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ.வி.கணேசலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையினை உத்துங்க விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.க.குகதாசக்குருக்கள் ஆற்றவுள்ளார். இத்துடன் நவராத்திரி தின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் போன்றனவும் நடைபெறவுள்ளதாக பாடசாலை சமூகம் அறிவித்துள்ளது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-120 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 60 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 40 |
| கோவா | 100 | 60 | 80 |
| கரட் | 100 | 80 | 120 |
| பூசணி | 60 | 30 | 40 |
| புடோல் | 50 | 70 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 50 | 60 |
| பாகற்காய் | 140 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 90 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 90 | 40 |
| போஞ்சி | 110 | 90 | 140 |
| கத்தரிதம்புள்ள | 70 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 220 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-40 |

# இராசி பலன்

22.10.2012
(ஐப்பசி 06, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
அட்டமி பின்னிரவு 1.20 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 10.51 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப செய்திகள் வந்து சேரும்.

**இடபம்** தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறத் தொடங்கும், குடும்பத்தில் ஏற்பட்ட பகை மாறும், எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு, தந்தை வழியில் தனவரவுண்டு.

**மிதுனம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, வேலைச்சுமை அதிகரிக்கும், செலவுகள் அதிகமாகும்.

**கடகம்** தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வெளியூர் பயணமொன்றால் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் போட்டிகள் மாறும், பெண்களால் பெருமைகள் வந்து சேரும் நாள், தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள்.

**கன்னி** நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும் நாள்.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியை கண்டு கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு

**தனுசு** நாவண்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், சயன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தை கொடுக்கலாம்.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளை செய்யலாம், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பித்த சம்பந்தமான வியாதிகள் ஏற்படலாம்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், பயணங்களால் பலனுண்டு, அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதாரநிலை உயர்வடையும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமானா தஹபுல் காப்புறுதி நிறுவனத்தின் 20 ஆவது கிளை கடந்த வாரம் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.மாணிக்கசிங்கி மங்கல விளக்கேற்றுவதையும், அமானா தஹபுல் கிளையினை நிறுவனத்தின் பணிப்பாளர் அஸட் சகீட் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், கிளையின் முகாமையாளர் முபாரிக் இப்றாகிம் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## யாழில் முதலாவது சொகுசு மாடி குடியிருப்பு

யாழ்ப்பாண மக்களுக்காக பல் வேறுபட்ட நன்மைகளைத் தன்னகத்தே கொண்ட முதலாவது சொகுசு மாடி அப்பார்ட்மென்டான துளசி மஹாலின் நிர்மாணப் பணிகள் யாழ்.கச்சேரியடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது குறித்து இக்குடியிருப்பின் கட்டுமானத்தை மேற்கொண்டு வரும் சங்கன் நிறுவனத்தின் தலைவர் மஹேஸ்வீரசேகரசுருத்துக்குறுகையில்,

யாழ்ப்பாணத்தில் கட்டுமானத் துறையில் திறமைமிக்க தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் வேறிடங்களில் இருந்தே தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை வரவழைத்து கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுவருகின்றோம். ஆனால் இப்போது இங்குள்ள இளைஞர்களை இதில் ஈடுபடுத்திவரும் நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

இதேவேளை துளசி மஹாலின் நிர்மாணப் பணிகள் 2013-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார்.

துளசி மஹாலில் வீடொன்றை வாங்குவதென்ற முடிவை சரியான நேரத்தில் எடுப்பதற்காக துளசி மஹால் எச்.என்.பி வங்கியின் சாந்தி ஹோம்ஸ் வீட்டுக் கடன் திட்டத்துடன் ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டுள்ளது.

இதன்மூலம் துளசி மஹாலில் வீட்டை வாங்க உத்தேசிப்போருக்கு இலகுவான மீள்செலுத்துகை திட்டத்தை எச்.என்.பி வழங்குகிறது.

வீட்டைக் கொள்வனவு செய்ய விரும்பும் வாடிக்கையாளர்கள் துளசி மஹாலுடனோ அல்லது எச்என்பி சாந்தி ஹோம்ஸ் திட்டத்துடனோ தொடர்பு கொள்ளமுடியும்.




## மன்னார் ஆடைத் தொழிற்சாலை 2013 முற்பகுதியில் இயங்கும்



மன்னாரில் 5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்படும் டைமெக்ஸ் அன்ட் பேர்காசம் ஆடைத் தொழிற்சாலை எதிர்வரும் 2013-ம் ஆண்டின் முற்பகுதியில் பூர்த்தியடையும் என கம்பனி அறிவித்துள்ளது.

மன்னாரில் நிர்மாணிக்கப்படும் முதலாவது முதலீட்டு சபை திட்டமான இந்த தொழிற்சாலையில், கழிவறை வசதிகள், ஒன்றுகூடும் பகுதிகள் , உணவகம், பயிற்சி வகுப்புகள் , ஊழியர்களுக்கான பாதுகாப்பு பெட்டகங்கள் அமைந்துள்ளன.

இந்த தொழிற்சாலை மன்னாரில் நிறுவப்பட்டதன் பின்னர் , இப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் , முதற்கட்டமாக 800 தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ்.குடாநாட்டுக்கு ஹச் 3ஜி விஸ்தரிப்பு

Hutch நிறுவனம் அதன் விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் மற்றுமொரு அங்கமாக தனது 3G வசதியை யாழ். குடாநாட்டுக்கும் வழங்கவுள்ளது. இம்மாதம் முதல் யாழ். குடாநாட்டு மக்கள் ஹச் 3 ஜி வசதியைப் பெறவுள்ளனர்.

இதன்மூலம் யாழ். குடா மக்கள் தங்குதடையற்ற இன்டர்நெட் வசதியைப் பெற வழியேற்பட்டுள்ளது.

நாடெங்கும் நிறுவப்படும் 1300 கோபுரங்களின் மூலம் நாடளாவிய ரீதியில் ஹச் 3 ஜி வசதியை வழங்கும் நடவடிக்கைகளின் ஒருபடியாகவே யாழ். குடாநாட்டுக்கான சேவை விஸ்தரிக்கப்படுகிறது.

# இந்தியாவின் ஊடகத்துறை 14 சதவீதம் வளர்ச்சி காணும்




இந்தியாவின் ஊடகத்துறை எதிர்வரும் 2015-16ம் நிதியாண்டில் ஆண்டுக் கணக்கில், 14 சதவீதம் வளர்ச்சி கண்டு, 36 ஆயிரத்து 5 கோடி இந்திய ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இத்துறையின் சந்தை மதிப்பு 21,190 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளதாக, தனியார் ஆய்வு நிறுவனம் ஒன்று தெரிவித்துள் ளது.

இந்தியாவின் தென் மாநிலங்களில், நவீன தொழில்நுட்பம், சிறந்த காட்சி அமைப்பு, உடனுக்குடன் செய்திகளை வழங்குதல் போன்ற காரணங்களால் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறை சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது.

இதில் தமிழகத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

ஊடகம் மற்றும் பொழுது போக்குச் சந்தையில் தொலைக்காட்சிகளே அதிகம் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

ஒட்டுமொத்த அளவில் இச் சந்தையில் தொலைக்காட்சிகளின் பங்களிப்பு 58 சதவீதம் அதாவது, 12,220 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது.

இதையடுத்து தினசரி,வார,மாத இதழ்களை உள்ளடக்கிய பத்திரிகை உள்ளன. இவற்றின் சந்தைப் பங்களிப்பு 29 சதவீதம். அதாவது 6 ஆயிரத்து 265 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது.

சினிமா 11 சதவீத சந்தைப் பங்களிப்புடன் 2 ஆயிரத்து 340 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது.

வானொலியின் சந்தை மதிப்பு 365 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது. இதன் சந்தை மதிப்பு குறைவாக இருந்தாலும், ஆண்டு தோறும் 22 சதவீதம் என்ற அளவில் விரைவான வளர்ச்சியை கண்டுவரும் முன்னணி பிரிவாக விளங்குகின்றது.

தென்மாநில ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

ஒட்டுமொத்த தென் மாநில ஊடகத் துறையில், தமிழகத்தின் பங்களிப்பு 36 சதவீதம் அதாவது 7 ஆயிரத்து 620 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது.

இதைத் தொடர்ந்து ஆந்திரா (6 ஆயிரத்து 480 கோடி ரூபாய் /30 சதவீதம்),

கர்நாடகா (3 ஆயிரத்து 985 கோடி ரூபாய்/19 சதவீதம்),

கேரளா (3 ஆயிரத்து 105 கோடி ரூபாய் /15 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

தென்மாநிலங்களில் பொழுது போக்குத் துறையின் கீழ்வரும் சினிமா, நாளுக்குநாள் அசுர வளர்ச்சி கண்டு வருகின்றது.

தற்போது 2 ஆயிரத்து 340 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கும் சினிமாச் சந்தை மதிப்பு வரும் 2016ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 550 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தென்மாநில திரைப்பட வர்த்தகத்தில் தமிழகம், ஆயிரத்து 30 கோடி ரூபாயுடன் முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து ஆந்திரா (ஆயிரத்து 20 கோடி ரூபாய்), கேளரா (150 கோழ), கர்நாடகா (140 கோடி ரூபாய்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## சீனப் பொருளாதாரம் 7.4 சதவீதமாக உயர்வு

உள்நாட்டு உற்பத்தி விரிவாக்கத்தின் காரணமாக நடப்பு நிதியாண்டின் 3-வது காலாண்டில் சீனாவின் பொருளாதாரம் 7.4 சதவீதம் அதிகரித்துள்ளது. 1999ம் ஆண்டிற்கு பிறகு சீனப் பொருளாதாரம் மிக குறைந்த அளவிலான வளர்ச்சியையே கண்டுள்ளது. மேலும் உள்நாட்டு முதலீடும் குறைந்து வந்தது. இருப்பினும் சீனாவில் ஏற்றுமதி தொழில் வளர்ச்சி பெற்று வந்ததால் சீனாவின் பொருளாதாரம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறது. அதன்படி இந்தாண்டில் முதல் காலாண்டில் 7.6 சதவீதமும் 2-வது காலாண்டில் 8.1 சதவீதமும் பொருளாதார வளர்ச்சி பெற்ற சீனா 3-வது காலாண்டில் 7.4 சதவீத வளர்ச்சியை பெற்றுள்ளது. மேலும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.61 ரில்லியன் அமெரிக்க டொலரையும் எட்டியுள்ளது.

## கிங்பிஷர் உரிமம் ரத்து

இந்தியாவில் கிங்பிஷர் விமானப் போக்குவரத்து நிறுவனத்துக்கான உரிமத்தை இந்திய விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்பு இடைநிறுத்தியுள்ளது.

தங்களுடைய நிதிச் சிக்கல்களை தீர்க்கக்கூடியதிட்டம்ஒன்றைஉருவாக்க இந்த நிறுவனம் தவறிய காரணத்தினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பார்த்த வேலைக்கான ஊதியம் கிடைக்கவில்லை என இந்நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய கிங்பிஷர் விமான சேவை ஒக்ரோபர் மாத ஆரம்பம் முதல் இயங்காமல் நின்று போயுள்ளது.

இந்தியாவின் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான விஜய் மல்லையாவினால் 2005-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் ஆரம்பத்திலிருந்தே எவ்விதமான இலாபத்தையும் ஈட்டியிருக்கவில்லை.

இந்த நிறுவனத்துக்கு 250 கோடி டொலர்கள் கடன் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5738.24 | 5649.53 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5260.11 | 5136.48 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3098.42 | 3041.98 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,389.22 |

**உயர்வடைந்த பங்குகள்:** குட் ஹோப்(1330.00), பரஹன்(1300.00), ஹலமசு (2770.00), சிலோன் லெதர்(w)(10.00), சிலோன் லெதர்(w)(10.00)

**வீழ்ச்சியடைந்த பங்குகள்:** கோகோ லங்கா(46.50), ஹொறலேனியல்(180.00), அலுபப்(27.90), ரீ சிமோல் ஹோல்டர்(50.40), சிரஸ் லிசர்(w)(5.40)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 127.50 | 130.58 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 204.23 | 210.14 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 165.81 | 171.32 |
| சுவிஸ் பிராங் | 136.92 | 142.16 |
| கனேடிய டொலர் | 128.64 | 133.28 |
| அவுஸ்திரேலிய டொலர் | 131.28 | 136.32 |
| சிங்கப்பூர் டொலர் | 103.95 | 107.53 |
| ஜப்பான் யென் | 1.59 | 1.65 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.41 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.09 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 1<br>உயரம்:-5'2"<br>தகைமை:-மின்சார தொழில்நுட்பம், (சுயதொழில்)<br>B/623 | பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அவிட்டம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-35.25<br>தகைமை:- BA ஆசிரியை<br>G/112 |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ரேவதி 2<br>உயரம்:-5'11"<br>கி.பா:-60<br>தொழில்:-A/L, AAT (சுயதொழில்)<br>B/105 | பிறப்பு:- 1990 இந்து<br>நட்சத்திரம்:- அனுசம் 2<br>உயரம்: 5'6"<br>கி.பா:-11.5<br>தகைமை: O/L Computer UK PR<br>G/138 |
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 2<br>உயரம்:-5'11"<br>கி.பா:-61.75<br>தொழில்:- CIMA எக்கவுண்டன்ட் (அவுஸ்திரேலிய PR)<br>B/110 | பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 83.75<br>தகைமை:- அரச திணைக்களம்<br>G/147 |
| பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:-சித்திரை 4<br>உயரம்:-5'8"<br>கி.பா:-16.75<br>தொழில்:-MSc (UK), பொறியியலாளர்<br>B/111 | பிறப்பு:- 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 51.5<br>தகைமை:- வெளிவாரிப் பட்டப் படிப்பு ஆசிரியை<br>G/621 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

# சூரசம்ஹாரம்

(வற்றாப்பளை)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது.

விஜயதசமி தினமாகிய நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மகிடா சூரசம்ஹாரம் நடைபெறவுள்ளது. இம்மகிடா சூரன் இவ்வருடம் புதிதாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே அடியார்கள் அனைவரும் அன்றைய தினம் ஆலயத்திற்கு வருகை தந்து அருள் பெற்று செல்லுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-2)


**YARL Properties**

(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்

021 2221919/0759751919

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

விற்றல், வாங்குதல் (Sales/Buy)

வாடகை (Rent)

பராமரிப்பு (Property Managment)

அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி

யாழ்ப்பாணம்

E-Mail - yarlproperties@gmail.com


# தபால் சேவைக்கு புதிதாக ஆயிரத்து 60 பேர் இணைப்பு

## நேற்று நேர்முகத் தேர்வு

தபால் சேவையை வலுப்படுத்தவென புதிதாக ஆயிரத்து 60 ஊழியர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக தபால் சேவை அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கென நேற்று முதல் தொடர்ந்து 10 நாட்கள் நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளதாகவும் தபால்சேவை அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெனாண்டோ குறிப்பிட்டார்.

நடத்தப்பட்ட தேர்வு காண் பரீட்சையில் சித்தியடைந்த 3 ஆயிரம் பேர் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் நேர்முகப் பரீட்சை 10 நாட்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளதாக அவர் கூறினார். நேர்முகப் பரீட்சையில் ஊழியர்கள் மாகாண மட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் பின்னர் தபால்சேவை வலையமைப்பு வலுப்படுத்தப்படும் எனவும் தபால் சேவை அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (அ-2)

# வவு.தெற்கு கல்வி அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்


வவுனியா தெற்கு பிரதேச கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கடந்த 18ஆம் திகதி வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் கொழும்பு பத்தரமுல்லவிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் நடைபெற்றது.

பாடசாலைகள், கல்வி அலுவலகங்களின் பௌதீக வளங்கள், ஆளணி விபரங்கள், மாணவர்களின் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.


இதன்போது மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களை நடத்துதல், ஆசிரியர் விடுதிகள் அமைத்தல் போன்ற விடயங்களை முன்னெடுக்குமாறு ஆளுநரினால் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

வெலிஓயா பிரதேச சுகாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின்போது குறித்த பிரதேச வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இப்பிரதேசமும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக காணப்படுவதனால் அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்துமாறு உரிய அதிகாரிகளை ஆளுநர் கேட்டுக்கொண்டார். அத்துடன் தொடர்ச்சியான கூட்டங்களை நடத்தி தேவையான அபிவிருத்திகளை மேற்கொண்டு மாகாணத்தின் ஏனைய வைத்தியசாலைகளில் உள்ள வசதிகளை இவ்வைத்திய சாலையிலும் ஏற்படுத்துமாறு ஆளுநர் அறிவுறுத்தினார். இதில் அவ்வத்துறைசார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ-2)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. கி.சிறீகாந்தராசா அவர்கள் பிரதீபா பிரபா எனும் நல்லாசான் விருதினைப் பெற்றுக் கொண்டார்.



திரு. இ.துரைசிங்கம் அவர்கள் அதிபர் தரம் உயரப் பெற்றுள்ளார்.

எங்கள் பாடசாலை ஆசிரியர்கள் இவர்களை உளமார வாழ்த்தி மகிழ்வடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

கிளி/ கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம், பூநகரி.


# திறந்த பல்கலை கற்கைகள் ஆரம்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத் தின் சகல பீடங்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 30 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதால் மேற்படி பல்கலைக்கழகத்தின் சகல மாணவர்களையும் இக்கல்வி நடவடிக்கைகளில் இணைந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ந-8)

# வாழ்த்துகின்றோம்

எம் மண்ணின் மைந்தா உமாசந்திரன் ஜனனே! உன் அன்னை உனை அழைத்து பேனாவைத் திணித்து அஞ்சேலென ஆசியும் அதனால் கொடுக்க விஞ்சும் உனதறிவைத் தொகுத்து ஆசான்கள் வழங்கிய அறிவைப் படித்து ஈழமெங்கும் நடந்தேறிய– 2011 இல் ஆண்டு 5 புலமைப் பரீட்சையில் நிறைந்த புள்ளிகள் 169 பெற்றனையே

| வல்வெட்டித்துறை | | | |
|---|---|---|---|
| யா/சிதம்பராக்கல்லூரி | | யா/சிவகுரு வித்தியாசாலை | |
| யு.லதுசோபன் | 146 | கே. லக்ஸன் | 135 |
| ஏ.கானகச்செல்வன் | 136 | பி.வளர்மதி | 132 |
| எஸ்.யாழினி | 133 | வி. அனுஜா | 125 |
| வி.அபிநயா | 120 | எஸ்.தனுசியா | 117 |
| எஸ்.சௌமியா | 114 | வி.தர்சிகா | 116 |
| ஜெ.தர்சிகா | 105 | கே.தாரணி | 111 |
| ரி.தாரணி | 103 | கே.ஸ்ரீஅபிராமி | 110 |
| | | ரி.யதுஸ்ரன் | 107 |



உமாசந்திரன் ஜனனன்

FAILURES ARE THE PILLERS OF SUCCESS இதற்கமைய துணிவே துணை என இப்பரீட்சைக்கு தோற்றிய அனைத்து குழந்தைச் செல்வங்களை மனந்தளராது தொடர்ந்தும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

*தாய் மண்ணாம் ஆதிகோவிலடிக்கும்*

*எம தருமை சிவகுரு வித்தியாசாலைக்கும்*

*பெரும் புகழ் சேர்த்தனயே!*

*நீ நீடூழி வாழ்க*

*உயர் கல்வியே குறிக்கோளாய் வீறு*

*நடைபோட வாழ்த்துகின்றோம்*

அத்துடன் இப் பரீட்சைக்குத் தோற்றி 100 புள்ளிகளுக்குள் பெற்ற மாணவர்களும் எதிர்காலத்தில் தாம் விரும்பும் ஏதேனும் ஓர் துறையில் சிறப்புற்று விளங்க மனதார வாழ்த்துகின்றோம்.

NVEPF

வாழ்த்துவோர்:
நடராசா வள்ளியம்மாள்,
கல்வி ஊக்குவிப்பு நிதியம்,
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

(சி/1358)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பரிசில் வழங்கலும் சித்திரக் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாவட்ட புகைத்தல் கட்டுப்பாட்டுக்குழுவினரால் உலக புகைத்தல் ஒழிப்பு தினத்தினை ஒட்டி நிகழ்த்தப்பட்ட சித்திர மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் சித்திரக்கண்காட்சியும் நடைபெறவுள்ளது.



இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிதிய சொர்ணாம்பிகை மண்டபத்தில் யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் உதவிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.ஜுட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)



நன்றி:ஐலண்ட்

# 25 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு...


(யாழ்ப்பாணம்)

கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதால் மட்டும் அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய போவதில்லை. அவர்கள் விட்டுச் சென்ற பணியை நாம் தொடர்ந்தால்தான் அவர்களுடைய ஆத்மா சாந்தியடையும் என யாழ்.போதனாவில் நேற்று நடைபெற்ற 25 ஆவது நினைவேந்தல் நிகழ்வில் அஞ்சலி உரை நிகழ்த்தப்பட்டது.

இவ் அஞ்சலி நிகழ்வில் பங்கு கொண்டிருந்த யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், தாதிய உத்தியோகத்தர்கள், உறவுகளினை பலி கொடுத்த உறவினர்கள், படுகொலை செய்யப்பட்டதனை நேரில் கண்ட பணியாளர்கள் ஆகியோர் உரையாற்றும் போதே அவர்கள் மேற்கண்டவாறு உரையாற்றினார்கள்.

அவர்கள் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில், இறப்புக்கள் ஈடுசெய்யக்கூடியவை அல்ல. எந்நேரமும் இப்படுகொலைகள் எம் நினைவுகளில் சுமந்தேயிருக்கும். இந்திய இராணுவத்தின் கொடூரமான தாக்குதலினால் மக்கள்சேவை மேற்கொண்ட பணியாளர்கள் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரு வேளை உணவுடன் போரின் மத்தியிலும் பணியாற்றிய இத்தியாகிகள் என்றும் எம் மனங்களில் நிலைத்தே நிற்பர் என்று அங்கு உரையாற்றப்பட்டதுளள.

மேலும் இந்நிகழ்வில் உயிர் நீத்தவர்களின் உறவுகள் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செய்ததோடு வைத்தியசாலைப் பணியாளர்கள் உட்பட அனைவரும் உயிரிழந்தவர்களுக்கு ஈகைச்சுடரேற்றினர். இறுதியில் அனைவரினதும் அஞ்சலி உரைகள் இடம்பெற்றதோடு நிகழ்வு உணர்வுபூர்வமாக முடிவுற்றது. (அ-4)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஸ்கந்தவரோதயாவில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் புத்தக கண்காட்சியொன்று நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமை மற்றும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை பாடசாலை அதிபர் இராமநாதன் ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள இப்புத்தக கண்காட்சியை சுன்னாகம் துர்க்கா பொத்தகசோலை அதிபர் சபா புஸ்பநாதன் ஆரம்பித்து வைக்கிறார்.

இக்கண்காட்சியானது சமயம், வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம், ஆரோக்கியம், அரசியல், கணனி தொழில்நுட்பம் எனப் பல பிரிவுகளின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் நூலக மன்றத்திற்குரிய சஞ்சிகையாக்கம், கட்டுரை, கவிதைப் போட்டிகள் என நடைபெறவுள்ளது.

எனவே மாணவர்கள், ஆசிரியர்கள் தவறாது கண்காட்சியினை பார்வையிட்டு பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)

# 2 ஆவது மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வாழ்நாள் வங்கியினர் சஞ்சிகையின் 2 ஆவது மலர் வெளியீட்டுவிழா இன்று திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக்கிளையில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

இதில் மலர்க்குழு உறுப்பினர்களையும் ஆர்வலர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்.மாவட்ட இலங்கை வங்கியின் ஓய்வூதிய சங்கத்தின் தலைவர் சீவரட்ணம் கேட்டுள்ளார். (அ-8)




# நவராத்திரி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் நாளை செவ்வாய்க்கிழமை வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள எட்டாம் நாள் நிகழ்வில் மகிடாசுரமர்த்தனி திருவருள் எனும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசிதரன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் நல்லூர் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (அ-)

# ஆறுகால்மடம் பகுதியில் கட்டாக்காலிகள் தொல்லை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளினால் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றது.

குறித்த பகுதியில் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் ஒன்று கூடும் கட்டாக்காலி கால்நடைகள் வீதியின் குறுக்கே போக்குவரத்திற்கு இடையூறாக நிற்பதனால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள போதும் குடாநாட்டில் பல பிரதேசங்களில் இதுபோன்று கட்டாக்காலிகளின் நடமாட்டத்தினால் பலர் நாள்தோறும் இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பருவ மழை பெய்து வருவதனால் தேங்கி நிற்கும் நீரினாலும் குன்றுகுழிகளினாலும் பயணிப்போர் பல அசௌகரியங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் கால்நடைகளினாலும் பல விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றது. யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் வீதிப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் கட்டாக்காலிகளினால் நாள்தோறும் மூன்றுக்கு மேற்பட்ட விபத்துச்சம்பவங்கள் இடம்பெற்றவண்ணமுள்ளன.

எனவே வீதிப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மத்திய வங்கி
## வட மாகாண அலுவலகம்

**தடை செய்யப்பட்ட திட்டங்களிலிருந்து விலகியிருங்கள் ! பங்கேற்றால் நீங்கள் உங்களது பணத்தை இழப்பதுடன் சிறை செல்லவும் நேரும்**

"திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின்படி,"

**பெறப்படும் நன்மைகள் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பில்**

அல்லது

**இத்திட்டத்தில் பங்கேற்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பின் அதிகரிப்பில்**

தங்கியிருக்கின்ற திட்டங்களில் பணத்தை அல்லது நாணயப் பெறுமதியை பங்களிப்புச் செய்வது சட்ட விரோதமாகும்.

இத்திட்டங்களில் பங்கேற்பவர்கள் கூடிய நன்மைகளைச் சம்பாதிப்பதற்காக புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்படுவதுடன் இணையத்தளங்கள் ஊடாக இத்திட்டங்களை பரப்பும் போக்கும் காணப்படுகிறது.

அவதானமாக இருங்கள் !

* இத்திட்டத்தில் பங்கேற்கும் எந்த நபரும் குற்றவாளியாகக்காணப்பட்டால் மூன்று ஆண்டுகளை விஞ்சாத சிறைத் தண்டனைக்கும் அல்லது ரூபா ஒரு மில்லியனை விஞ்சாத தண்டப் பணத்திற்கும் அல்லது சிறைத் தண்டனை மற்றும் தண்டப் பணம் இரண்டுக்கும் உள்ளாவர்
* எந்தவொரு ஏனைய நபருக்கு சேதம் அல்லது தீங்கை ஏற்படுத்துவதற்கு வேண்டுமென்றோ அல்லது தெரிந்து கொண்டோ செய்யப்பட்ட குற்றங்களைப் பொறுத்தமட்டில் தண்டனை மிகவும் கடுமையாக இருக்கும்

எனவே,

* தடை செய்யப்பட்ட திட்டங்களுக்கு இல்லை; என்று கூறுவதன் மூலம் கஷ்டப்பட்டு உழைத்த உங்களது பணத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்
* இத்திட்டங்களில் பங்கேற்பதனூடாக இலகுவாகப் பணத்தைச் சம்பாதித்தல் இயலாதென்பதை விளங்கிக் கொள்ளுங்கள்

(சீ/1345)

**பிரமிட் அமைப்புக்கள் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்களில் பங்கேற்பது சட்ட விரோதமானதாகும்!**

எனவே, அத்தகைய வஞ்சகமான மற்றும் மோசடியான திட்டங்களிலிருந்து விலகியிருங்கள் !!

**இது பொதுமக்களின் நன்மை கருதி இலங்கை மத்திய வங்கியால் விடுக்கப்படும் செய்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விற்பனை முடங்கும் நிலையில்

## நிதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

இலங்கையில் வாகனங்கள் மீது விதிக்கப்படும் வரி வீதங்கள் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கப்படவுள்ளன. இதனால் இலங்கையில் வாகன விற்பனை முடங்கிப்போகும் அபாயம் ஏற்படும் என்று வெளியிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெய சுந்தர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு ஒதுக்கத்தை அடிப்படையாக கொண்டு எதிர்வரும் வரவுசெலவுத்திட்டத்திலும் வாகனங்கள் மீதான வரிகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே வாகனங்கள் மீது விதிக்கப்படும் இறக்குமதி தீர்வைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் விற்பனை இல்லாமல் சுமார் 5 ஆயிரம் வாகனங்களை இறக்குமதியாளர்கள் மீண்டும் அதனை ஏற்றுமதி செய்த நாடுகளுக்கே அனுப்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலே மீண்டும் வாகனங்கள் மீது இறக்குமதி தீர்வை அதிகரிப்பு தகவல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே இலங்கையில் வாகன விற்பனை முடங்கிப்போகும் அபாயம் ஏற்படும் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# உணவு விசமானதால் 13 பேர் ஆஸ்பத்திரியில்

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ள பல்ரம்பூரில் அசுத்தமான உணவை உட்கொண்டதாக கூறப்படும் இலங்கையை சேர்ந்த 13 சுற்றுலாப்பயணிகள் சுகவீனமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுகவீனமடைந்தவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்ரம்பூரிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த இச் சுற்றுலாப் பயணிகள் காலை நேர உணவை உட்கொண்ட பின்னர் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உணவு விசமடைந்ததன் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் வெளியிலிருந்து பெறப்பட்ட உணவின் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டதாக அக்ஹோட்டல் உரிமையாளர் குற்றஞ்சாட்டினார். எனினும் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# வேட்டையாடும் மரபை தொடரும் உரிமை எமக்கு கிடைக்க வேண்டும்

## ஆதிவாசிகளின் தலைவர் தெரிவிப்பு

இலங்கையிலுள்ள அனைத்து முதியோர் இல்லங்களையும் மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆதிவாசிகளின் தலைவர் ஊறுவரிகே வன்னியலா அத்தன் தெரிவித்துள்ளார்.

இந்த நாடும் நாட்டின் சமூகங்களும் அபிவிருத்தி கண்டுள்ளன என்று தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர். இருப்பினம் தமது தாய் தந்தையர் முதுமையடைந்ததும் அவர்களை முதியோர் இல்லங்களுக்கு கொண்டு சென்று விடும் பிள்ளைகள் இந்த சமூகத்தில் இருக்கும் பட்சத்தில் இதுவொரு அபிவிருத்தியடைந்த சமூகம் என்று எப்படி கூற முடியும்? என்ற அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் எல்லா பாகங்களிலும் முதியோர் இல்லங்களை நிர்மாணிப்பதை விட்டுவிட்டு முதியோருக்கு எவ்வாறு மரியாதையளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆதிவாசிகளின் பரம்பரைகளுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். பரம்பரை பரம்பரையாக நாம் கையாண்டு வந்த வேட்டையாடும் மரபை தொடரும் உரிமை எமக்கு தொடர்ந்து இருக்க வேண்டும். உலகின் ஏனைய இனத்தவர்களை போன்று எமக்கும் வாழும் உரிமை முழுமையாக கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# தேசிய தொழிற் சம்மேளனம் போராட்டங்களை நடத்தும்

## ஜே.வி.பி அறிவிப்பு

(கொழும்பு)

அதிகரித்த சம்பளங்களை கோரி ஜே.வி.பியின் தொழிற்சங்கமான தேசிய தொழிற்சங்க சம்மேளனம் பாரிய போராட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. இந்த வாரத்தில் போராட்டங்களை நடத்தப்போவதாக சம்மேளனத்தின் தலைவர் கே.டி.லால்காந்த எச்சரித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2012 ஆம் ஆண்டு வரை வாழ்க்கை செலவுப்புள்ளி 21 ஆயிரத்து 52 ஆக உயர்ந்துள்ளது. இந்நிலையில் அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 13 ஆயிரத்து 442 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும். இதனை விடுத்து 7 ஆயிரத்து 609 ரூபாவை வழங்குவதை தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று லால்காந்த குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கேள்வி கோரல்கள்

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**யாழ்ப்பாணம்.**

## யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாலங்கள் புனர்நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

## பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

1) பின்வரும் புனர்நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை விபரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1.கொங்கிறீற் கால்வாய் அமைத்தல்–நல்லூர்–ஓட்டுமடம் வீதி, 0.30–0.40 கி.மீ | 15,000/= | C 8 |
| 2.கொங்கிறீற் கால்வாய் அமைத்தல்–வழுக்கையாறு–புங்குடுதீவு– குறிகாட்டுவான் வீதி, 10.3–10.4 கி.மீ | 15,000/= | C 8 |
| 3.27/2 இலக்க மதகு நிர்மாணம் – யாழ்ப்பாணம்– பொன்னாலை– பருத்தித்துறை வீதி | 15,000/= | C 8 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 05.11.2012 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 05.11.2012 அன்று காலை 10.30 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 26.10.2012 தொடக்கம் 02.11.2012 பிற்பகல் 2 மணிவரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/– + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

2)தகுதிவாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

3) கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

4) முன்கேள்வி கோரல் கூட்டம் 31.10.2012 அன்று காலை 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை , யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

5)கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும். (04.03.2013)

6)மேலே குறிப்பிட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை, அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ள கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

7) மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (05.11.2012 மு.ப. 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

8)கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

9) மேலதிக விபரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| பிரதம பொறியியலாளர்,<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை,<br>யாழ்ப்பாணம் | 021-222-2968 |

மாகாணப்பணிப்பாளர் (வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1347)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு


78

## கலிங்கத்து மாகன்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

### மீண்டும் சந்திரபானு

இந்தவேளையில் வடக்கே கரந்துறைந்த சாவகன் சந்திரபானு, தனது வீரர்களையும் பாண்டிய சோழத் தமிழ்ப் போர்வீரர்களையும் சேர்த்துக்



லங்கதிலக்க -உள்புறத்தோற்றம்


கொண்டு இலங்கைமீது மீண்டும் படையெடுத்து வந்தான். பாடி, குருந்தை முதலான பிரதேசங்களைக் கைப்பற்றி அங்குள்ள மக்களையும் தன் படையில் சேர்த்துக்கொண்டு சுப பர்வதத்தில் முகாமிட்டிருந்தான். இதனை அறிந்த விஜயபாகுவுடன், இளவரசன் வீரபாகுவின் தலைமையில் பெரும் சேனையை அனுப்பி வைத்தான். அதன் பின்னர் அமைச்சர்களுடன் கலந்தாலோசித்துப் பெரும் படையுடன் தானே போருக்குச் சென்றான். சந்திரபானுவின் சேனை சுற்றிவளைக்கப்பட்டது. அதேவேளை பாண்டியரின் உதவிப் படையும் வந்து இணைந்து கொண்டது. அப்படைகளின் முன் நிற்க முடியாது சந்திரபானுவின் படை தோல்வி கண்டது. பாண்டியப் படைவீரர்களால் பிடிக்கப்பட்ட சந்திரபானுவின் சிரசை பாண்டியன் கொய்தான். சந்திரபானுவின் மகன் சரணடைந்ததால் அவனுக்கு வீரபாண்டியன் வடக்கே ஆட்சி செய்ய அனுமதித்து திருப்பி அனுப்பி வைத்தான். சந்திரபானுவின் கொற்றக் குடை, அரசமேளம், வலம்புரிச்சங்கு, ஆபரணங்கள், மகளிர், அனைத்தையும் பாண்டியர் கைப்பற்றி



பராக்கிரமபாகு மன்னனின் கல்லிருக்கை

தம்நாட்டிற்கு எடுத்துச் சென்றனர் என அறியக்கிடக்கின்றது. அத்துடன் பராக்கிரமபாகுவிடம் திறையாகப் பெற்ற யானைகளையும் எடுத்துச் சென்றனர்.

"இவர்கள் ஒன்று சேர்ந்து மேற்கொண்ட படையெடுப்பின் பயனாக, 1256 இல் கலிங்கத்து மாகனின் நிலை தளர்ந்தது. ஏற்கனவே குறிப்பிட்டது போல பாண்டிய மன்னர் மூவரும், சிங்கள மன்னர் மூவரும், அவரது உதவியாளர்களும் ஒன்று சேர்ந்து வியூகம் அமைத்து செயற்பட்டதனால் இந்நிலை ஏற்பட்டது. பாண்டிய மன்னர்கள் சாவகனை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட, சிங்கள மன்னர்கள் மாகனைத் தாக்குவதில் ஈடுபட்டிருக்கலாம்". "அத்தருணத்தில் கலிங்கத்து மாகனின் தலைமையிலும் ஜயபாகு தலைமையிலும் 40 ஆயிரம் தமிழ் வீரர்களும் கேரள வீரர்களும் இருந்தனர். மாகன் தன் பாதுகாப்புக் கோட்டைகளையும் அரண்களையும் நாட்டின் பல பகுதிகளிலும் அமைத்திருந்தான். புலத்திநகரம் பராக்கிரமபாகுவின் படைவீரர்களால் முற்றுகையிடப்பட்டது. மாகனும் ஏனையோரும் நிலைமைகளைப் புரிந்து கொண்டனர். தமது திரவியங்கள், எடுக்கக்கூடிய சொத்துக்கள், பட்டுத்துணிகள் என்பனவற்றைக் காவிக்கொண்டு தம்



பராக்கிரமபாகுவால் கட்டப்பட்டு 4 ஆம் விஜயபாகுவால் புனரமைக்கப்பட்ட லங்கதிலக்க -வெளிப்புறத்தோற்றம்

மனைவி பிள்ளைகளுடன் கோட்டையை விட்டு வெளியேறினர். கிழக்குக் கதவுவழியாக வெளியேறுவதற்குப் பதிலாக மேற்குக் கதவு வழியாக வெளியேறினர். கால வாவிப் பிரதேசத்தில் முகாமிட்டி ருந்த சிங்களப் படைவீரர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது. அவர்களின் பொருட்கள், திரவியங்கள் அனைத்தையும் பறித்துக்கொண்டதோடு தப்பி காடுகளுக்குள் ஓடிய ஒரு சிலரைத்தவிர அனைவரையும் வாளுக்கு இரையாகினர். சிங்கள மக்கள் தம் செல்வங்களையும் காணிகளையும் மீளப்பெற்றனர். மாகனின் ஆட்சி இவ்வாறு முற்றுப்பெற்றது" என்கிறது சூளவம்சம்.

அத்தாக்குதலிலிருந்து கலிங்கத்து மாகனும் அவன் படை வீரர்கள் பலரும் தப்பி வடக்கே ஓடினர். "மாகமன்னன் 1255 வரை பொலநறுவையில் ஆட்சி புரிந்தான் என்றும் அதன் பின்னர் சிங்களப் படைகளால் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டான்" எனவும் இந்திரபாலா பரணவிதாரணவின் எடுகோளைக் குறிப்பிடுகிறார். அவர்கள் பதவியாவில் தம்மிருப்பிடத்தை அமைத்துக் கொண்டனர்.

### பராக்கிரமபாகு 2 பொலநறுவையில் முடிசூடுதல்

கலிங்கத்து மகானைத் துரத்திவிட்ட பின்னர் பராக்கிரமபாகு தம்பதேனியா திரும்ப, விஜயபாகு புலத்தி நகருக்குச் சென்றான். பொலநறுவையைத் திருத்தியமைக்கும் எண்ணத்துடன் புலத்தி நகருக்குச் சென்றிருந்தான். தந்தை பராக்கிரமபாகு மகனுடன் புலத்திநகர் செல்லாது தம்பதேனியாவுக்குச் சென்றதன் காரணத்தை விஜயபாகு அறிவான்... பாழடைந்திருக்கும் நகரத்துக்கு அரசனை அழைத்துச் செல்ல விரும்பாமல் அவரைத் தம்பதேனியாவில் தங்கியிருக்குமாறு கூறிவிட்டு பொல நறுவை சென்றான். இவனுடன் படைவீரர்கள், பிரதானிகள் ஆகியோரும் சென்றனர்... ஒரு பகுதி குடிமக்களும் அந்நகருக்கு நகர்ந்தனர். புதிதாகப் புலத்தி நகரைத்திருத்தியமைத்தனர். வன்னித் தலைவர் களைக் கொண்டு அனுராதபுரத்தில் ருவான் வெலிசாய தூபியைத் திருத்துவித்தான்.

புலத்திநகரை முன்பு விளங்கியது போன்று விஜயபாகு திருத்தி அமைத்தான். இராச்சியத்தின் அரசநகரமாகப் பிரகடனப்படுத்தினான். பின்னர் மன்னன் பராக்கிரமபாகுவுக்குத் தூதுவர்கள் மூலம் செய்தி அனுப்பி புலத்தி நகருக்கு வருமாறு அழைப்பு விட்டான். பிரதானிகளோடு புலத்தி நகருக்கு வந்த மன்னனை எதிர் கொண்டு வரவேற்றான். நகரே விழாக் கோலம் பூண்டது. அதன் பின்னர் வீரபாகுவிடம் புலத்திநகரைப் பொறுப்புக் கொடுத்துவிட்டு, தந்தையுடன் தம்பதேனியாவுக்குச் சென்று புனித தாதுக்களை ஊர்வலமாக எடுத்து வந்தான். அதற்கென அமைக்கப்பட்ட சைத்தியத்தில் தாதுவை வைத்துப் பிரதிஷ்டை செய்து தந்தையின் விருப்பினை நிறைவேற்றினான். அதன் பின்னர் பராக்கிரமபாகு புலத்தி



நகரில் இரண்டாம் தடவையான 1262 ஆம் ஆண்டு முடிபுனைந்து கொண்டான். கலிங்கத்து மாகனைத் துரத்திய ஆறாம் வருடக்கழிவிலேயே பொலநறுவையில் 2 ஆம் பராக்கிரபாகு முடிபுனைந்தான்.

### பொலநறுவைக்கால சமூக, பொருளாதார நிலை

பொலநறுவைக்காலப் பொருளாதார நடவடிக்கைகளில் பயிர்ச் செய்கையே பிரதானமான சீவனோபாயமாக இருந்துள்ளது. பிரதானமான பயிராக நெல் செய்கை பண்ணப்பட்டது. பெரும்போகம், சிறுபோகம் என இரு பருவங்களிலும் இன்றுபோல நெற்செய்கை நடந்தது. கலப்பை, அரிவாள், கோடரி, மண்வெட்டி, காட்டுக்கத்தி எனும் கருவிகள் பாவனையிலிருந்தன. உழவிற்கு எருதுகளும் எருமைகளும் பயன்படுத்தப்பட்டன. களை பிடுங்கல் முறை இருந்தது. நெற்பயிர்களுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தக் கிராமிய முறைகள் கைக்கொள்ளப்பட்டன. விவசாய சமூகத்தில் சேனைப் பயிர்ச்சேய்கை முக்கியம் பெற்றிருந்து. உளுந்து, பயறு, குரக்கன் முதலான தானியங்கள் பயிரிடப்பட்டன. காய்கறிகள் செய்கை பண்ணப்பட்டன. வீட்டுத் தோட்டங்களில் தென்னை, கமுகு, மா, தோடை, புளி, பலா, வெற்றிலை என்பன வளர்க்கப்பட்டன. ஆடு, மாடு, எருமை, கோழி எனும் விலங்கு வேளாண்மை நடைபெற்றது. அனுராபுரத்துக் காலத்திலிருந்தே இலங்கையின் பயிர்ச்செய்கையில் நீர்ப்பாசனம் முதன்மை பெற்றி ருந்தது. முதலாம் விஜயபாகு காலத்தில் பழைய நீர்ப்பாசனங் களான மின்னேரியா, அலஹர கால்வாய், மகாகனதராக் குளம், மஹல்கடவெலக்குளம் என்பன புனரமைக்கப்பட்டன. பராக்கிரம பாகு காலத்தில் புகழ் பெற்ற பராக்கிரமசமுத்திரம் அமைக்கப் பட்டது. (படம்) மழை மூலம் கிடைக்கும் சிறுதுளி நீரையேனும் கடலினுள் செல்லவிடக்கூடாது என்பது இம்மன்னனின் கூற்று.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு வைரஸ் நோயிலிருந்து பாதுகாக்க நீங்கள் செய்ய வேண்டியவை என்ன...?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு வைரஸ் நோய் பரவும் சாத்தியம் அதிகரித்து வருவதாக சுகாதார வைத்தியப் பகுதியினர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டிய அவசரமானதும் அவசியமானதுமான தேவை எழுந்துள்ளது.

மக்கள் இந்நோயால் பீடிக்கப்படுவதை தடுப்பதற்கு தனிப்பட்ட ரீதியில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் நோய் வந்தால் அதனைக்குணப்படுத்துவதற்கு செய்ய வேண்டிய கருமங்களையும் குறிப்பு வடிவத்தில் இலகு முறையில் வடித்து தருகிறோம்.

**டெங்கு தொற்று என்பது என்ன?**

இது நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய்.

இது இரு வகையாக வெளிப்படும்.

அ) டெங்கு காய்ச்சல் (DENQUE FEVER)

ஆ) இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்கு காய்ச்சல் (DENGUE HAEMORHAGIC FEVER)

**டெங்கு காய்ச்சலின் குணங்குறிகள்**

சடுதியாக ஏற்படும் காய்ச்சல், கடுமையான தலையிடி, கண்ணின் பிற்பகுதியில் நோ, தசை எலும்பு மூட்டுக்கள் போன்றவற்றில் கடும் நோ.

**இரத்த தாக்கத்தை உண்டாக்கும் டெங்கு காய்ச்சலின் குணங்குறிகள்**

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் உறுப்புக்களில் இரத்தம் கசிதலும் அதிர்ச்சி நிலை ஏற்படும் நிலையிலும் சாதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டு 2-3 நாட்களில் காணப்படும் இந்த நிலை 5-6 நாட்கள் (103பாகை - 105 பாகை) தொடரும். 3-4 நாட்களில் குறைந்து மீண்டும் வரக்கூடும். இந்த நிலையில் நோயாளிக்கு பலவீனமான நிலை ஏற்பட்டு இயலாத் தன்மை ஏற்படும். இந்நோய் மக்களிடையே சடுதியாக பெருகிப் பலரைத் தாக்கும் சக்தி கொண்டது.

**டெங்கு காய்ச்சலை அடையாளம் காணும் வழிகள்**

சடுதியாக ஏற்படும் காய்ச்சல், கடுமையான தலையிடி குறிப்பாக நெற்றிப்பகுதிகளில் , கண்களின் பிற்பகுதிகளில் கடும் நோவும் கண்களை அசைக்கும் போது நோவு கூடுதலும், உடலின் முழுப்பகுதிகளிலும் மூட்டுக்களிலும் நோ , ஓங்காளம் வாந்தியெடுத்தல்.

**கடுமையான டெங்கு இரத்தத் தாக்க நிலை அதிர்ச்சி நிலையை எவ்வாறு இனங்காண்பது**

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் கீழே தரப்படும் ஏதாவது 1 முதல் 2 வரையான குணங்குறிகள் ஆபத்து நிலையாக கணிக்கலாம்.

கடுமையான தொடர்ச்சியான வயிற்று நோ அல்லது வலி, மூக்கு, வாய், முரசு, தோலின் அடியில் குருதி ஒழுக்கு காணப்படுதல், அடிக்கடி குருதி கலந்தோ அல்லது இல்லாமலோ வாந்தி எடுத்தல் ,மலம் கறுப்பு நிறமாக வெளியேறுதல், நாவரட்சி மற்றும் தண்ணீர் தாகம் ஏற்படல், வெளிறிய, குளிர்ந்த நிலையில் தோல் காணப்படல்.

**நோயை இனங்காணும் முறைகள்**


சுலபமாக செய்யக்கூடிய ஆய்வு முறைகள் (Platelet Count, PVC Count, Tourniquet test, haematocrit test, Denque test) எவ்வாறு எனினும் மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் இருப்பின் சிகிச்சை உடன் மேற்கொள்ள வேண்டும்.

**சிகிச்சை முறைகள்**

டெங்கு நோய் என்று கருதினால் ஒரு தகைமையுள்ள வைத்தியரை கொண்டு பரிசோதித்தல் அவசியம். ஆரம்பத்தில் சிகிச்சை மேற்கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும் உயிர் இழப்பையும் தவிர்க்கலாம். (அஸ்பிரின் (Asprin), புறுபென் (Brufen) கொடுப்பதை தவிர்க்க வேண்டும். அவை நோயை சிக்கலாக்கும். பரசிற்றமோல் (Paracetamol) வைத்திய ஆலோசனையுடன் கொடுக்கலாம்.

கடுமையான வயிற்றுநோ, கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல், கடும் வியர்வை வெளியேறுதல், மூக்கு, வாய், தோலுக்கு அடியில் இரத்தக் கசிவு காணப்படுதல். குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிர் ஆபத்து ஏற்படுவதற்கான அறிகுறிகள். ஆகவே அவ்வேளையில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

**டெங்கு பற்றி அடிப்படைத் தகவல்கள்**



1. Aedes வகை நுளம்பினால் இந்த நோய் தொற்று ஏற்படலாம்.

2. ஒரு நோயாளியை கடித்த நுளம்பு ஒரு சுகதேகியை கடித்தால் அவருக்கு 5-7 நாட்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய்க்காவியாக இருந்தது என்பதை கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நுளம்பு கடியில் இருந்து பாதுகாப்பது முக்கியம்.

**நுளம்பு பெருகும் இடங்கள்**

நீர்த்தேக்கங்கள், நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டிருக்கும் வெற்றுப்போத்தல்கள், பாவனைக்குதவாத சட்டிகள் போன்றவற்றிலும் தண்ணீர் தொட்டிகளிலும் , மழை நீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெருகும் தண்ணீரை தேக்கி வைக்கும் கொள்கலன்கள் மூடப்படாமல் இருப்பின் அவை 7 நாட்களுக்கு ஒருமுறை மாற்றப்பட வேண்டும். இல்லையேல் நுளம்பின் குடம்பிகள் உருவெடுத்து பெருகும்.

**நுளம்பு கடிப்பதை தவிர்த்தல்**

டெங்கு நுளம்பு பகலில் கடிக்கும். அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும், முழு நீள மேற்சட்டை மற்றும் கால்களை பாதுகாக்கும் வகையில் உடை அணிதல் வேண்டும், நுளம்பு வராமல் தடுக்கும் மருந்துகளை பாவித்தல், நுளம்புச்சுருள் மற்றும் அழிக்கும் இரசாயனப்பொருட்களை பாவித்தல், நுளம்பு வலைகளை பயன்படுத்துதல் (குறிப்பாக குழந்தைகள் சிறார்களுக்கு) Permithrin மருந்து தெளித்த நுளம்பு வலைகள் மற்றும் கதவு, யன்னல் வலைகளை பயன்படுத்துதல் ,நோய் பரம்பலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல், நோயாளியிடமிருந்து ஏனையோருக்கு பரவாமல் நடவடிக்கை எடுப்பது அவசியம்

Dr. இ.தெய்வேந்திரன்
பணிப்பாளர்,
நியூ யாழ்.வைத்தியசாலை.

**நுளம்புகள் பெருகுவதை தடுத்தல்**

டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் ஒவ்வொரு வீட்டின் சுற்றுப் புறத்திலுள்ள நீர் தேங்கும் இடங்களிலிருந்து பரவுகின்றது.

**அதனை தடுப்பதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வருமாறு,**

வீட்டுச் சூழலிலுள்ள நீர் தேங்கும் நிலைகளை ஒழித்தல், வீட்டிற்குள் வைக்கும் சாடிகள் கோப்பைகள் போன்றவற்றுள் நீர் நிலைத்து நிற்காமல் சுத்தப்படுத்தல், தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடி வைத்தல், பாவித்த எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களை சுற்றுச் சூழலிலிருந்து அகற்றி அழித்தல்.

**மேலே தெரிவிக்கப்பட்டிருந்த முறைகளை கவனத்தில் எடுத்து நாம் எல்லோரும் செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மை காப்பாற்றி கொள்ளலாம்.**

# அரசை ஆர்ப்பாட்டத்தால் தோற்கடித்து விட முடியாது

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் தெரிவிப்பு

பேரணிகள், ஆர்ப்பாட்டங்களால் தற்போதைய அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாது என எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட செயற்பாட்டாளர்களின் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேரணி செல்வதன் மூலம் எதனையும் செய்துவிட முடியாது. தமது இலக்கு எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு தான் என்றும் அவர் கூறினார்.

மாகாண சபை தேர்தல்களை நடத்தி எதிர்க்கட்சியினரை களைப்படைய செய்து பொதுத் தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டை இலக்காக கொண்டே நாங்கள் மாகாண சபை தேர்தல்களுக்கு முகங்கொடுக்கின்றோம் என எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டின் நீதியை நிலைநாட்டுவதில் பெரும் சிக்கல் காணப்படுகிறது

## கொழும்பு தெற்கு பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றங்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள நீதியை நிலைநாட்டுவதில் பெரும் சிக்கல்கள் காணப்படுவதாக கொழும்பு தெற்கு பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பிரேமலால் ரணகல தெரிவித்துள்ளார்.

மேலும் குற்றவாளிகள் அவர்களுக்கு கிடைக்கும் தண்டனைகளை எளிதாக கருதுவதால் குற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குற்றச்செயல்களை தடுப்பதற்கு பொது மக்களின் உதவியை பெற்றுக் கொள்வதற்கான ஒன்று கூடலிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதியை நிலைநாட்டுவதில் அரசியல் தலையீடுகள் காணப்படுமேயானால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயார் என இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த உடுவே தம்மாலோக தேரர் குறிப்பிட்டார். (அ-2)



யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் நல்லதோர் உணவு செய்வோம், நூற்றாண்டு கடந்து நீடூழி வாழ ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நேற்று யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி வைத்தியர் கே.பாலகுமார் உரையாற்றுவதையும் நல்லதோர் உணவு செய்வோம் நூலின் முதற்பிரதியை யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடமிருந்து யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி பாடசாலை அதிபர் செல்வி. ரஜீலா வல்லிபுரநாதன் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப அறிவில் இலங்கைக்கு 101 ஆவது இடம்

## ஐ.நா. அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

சர்வதேச பொருளாதாரத்தை வெற்றி கொள்ளக்கூடிய அடிப்படை தொழில்நுட்ப அறிவு விடயத்தில் இலங்கை பின்தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுவதாக என ஐக்கிய நாடுகளின் அறிக்கை ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் இது தொடர்பான சுட்டியில் இலங்கை 87 ஆவது இடத்தை வகித்தது.

எனினும் 2012 ஆம் ஆண்டு இலங்கை இந்தச் சுட்டியில் 101 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சுட்டியில் 145 நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலை கல்வி விடயங்களில் இலங்கையால் முன்னேற்றம் காணமுடிந்துள்ளது. எனினும் தகவல் மற்றும் பரிமாற்ற தொழில்நுட்ப விடயங்களிலேயே இலங்கை பின்தங்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாத்திரம் அல்ல நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தொழில்நுட்ப அறிவு குறைந்துள்ளது.

எனவே, இரண்டாம் நிலை உயர்கல்வி வீதிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இருந்து வெளியேறும் மாணவர்கள் சர்வதேச பொருளாதாரத்துக்கு ஈடுகொடுக்கும் வகையிலான தொழில்நுட்ப அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கோரியுள்ளது.

இந்நிலையில் குறித்த கல்விச்சாலைகளில் தொழில் நுட்பங்களுடன் கூடிய வகையில் கல்வியூட்டல்கள் சீர்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் அடுத்த மாதம் தமிழகம் விஜயம்

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழகத்திலுள்ள இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்களை மீள இலங்கைக்கு அழைத்து வருவது பற்றியும் அவர்களுக்கான வீடமைப்பு மற்றும் ஏனைய வசதிகள் குறித்து தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழுவொன்று அடுத்த மாதம் தமிழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பியவர்கள் இங்கு தாம் சந்திக்கும் அவலநிலையை இந்தியாவிலுள்ள தமது உறவுகளுக்கும் தெரிவிப்பதாலேயே இந்தியாவிலுள்ள இலங்கையர்கள் இலங்கை திரும்பத் தயங்குகின்றனர்.

எனவே, தமிழக அரசும் இந்திய மத்திய அரசும் இணைந்து இந்தியாவில் இருந்து இலங்கை திரும்புவோருக்கு இலங்கையில் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கவும் ஏனைய வசதிகளை செய்து கொடுப்பதாகவும் அறிவித்தால் அவர்கள் இலங்கை திரும்புவதற்கு ஆர்வம் காட்டுவர்.

தமிழகத்திலுள்ள இலங்கை தமிழர்களுக்கு தமிழக அரசு கோடிக்கணக்கான ரூபாவை செலவிடுகின்றது.

இந்தப் பணத்தை இலங்கையில் அவர்களது காணிகளில் வீடுகளை நிர்மாணிக்க பயன்படுத்தலாம் என தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுக்கவுள்ளோம்.

கூட்டமைப்புக்குழு தமிழகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துமெனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# 400 பல்கலை விரிவுரையாளர்கள் வெளிநாடுகளில் உள்ளனர்

## உயர்கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 400 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வெளிநாடுகளில் குடியமர்ந்துள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் அவ்அமைச்சு மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டில் செய்து கொண்ட கல்வியியல் தொடர்பான உடன் படிக்கைகளையும் அதற்கான அரச செலவுகளையும் உதாசீனம் செய்து அவர்கள் வெளிநாடுகளில் குடியமர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு குறிப்பாக பெரும்பாலான வெளிநாடு சென்றுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

இவர்கள் மேலதிக கற்கைகளுக்காக வெளிநாடு சென்ற நிலையிலேயே அங்கு குடியமர்ந்துள்ளனர்.

இதன்காரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 2 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# 2012.10 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1383-போர்த்துக்கல் மன்னன் முதலாம் பேர்டினண்ட்டின் இறப்பின் பின்னர் ஆண் வாரிசு அற்ற நிலையில் நாட்டில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

★1633-மிங் வம்சம் டச்சு கிழக்கிந்தியக் கம்பனியுடன் சீனாவின் தெற்கு பூஜியன் கடலில் போரில் ஈடுபட்டு பெரும் வெற்றி பெற்றது.

★1692-மந்திரம் செய்ததற்காக ஐக்கிய அமெரிக்காவில் வழங்கப்பட்ட கடைசி தூக்குத் தண்டனை.

★1707-நான்கு பிரித்தானிய கடற்படைக் கப்பல்கள் சிலி தீவுகளில் மூழ்கியதில் ஆயிரக்கணக்கான மாலுமிகள் உயிரிழந்தனர்.

★1784-இரசியா அலாஸ்காவின் கோடியாக் தீவில் குடியேற்றமொன்றை அமைத்தது.

★1797- பதிவு செய்யப்பட்ட முதலாவது பரசூட் பாய்ச்சல் அன்ட்ரே ஜக்கியுஸ் கர்னெரின் என்பவரால் பரிஸ் நகருக்கு 3 ஆயிரத்து 200 அடி மேலாக நிகழ்த்தப்பட்டது.

★1844-வில்லியம் மில்லரின் படிப்பினைகளைக் பின்பற்றிய மில்லரிய கிறிஸ்தவர்கள் இயேசுவின் இரண்டாம் வருகையையும் உலக முடிவையும் எதிர்பார்த்திருந்தனர்.

★1866-பிரேசில் ஆர்ஜென்டீனா உருகுவேக்கு எதிராக பராகுவே போரில் ஈடுபட்டது.

★1875-ஆர்ஜென்டீனாவுக்கான முதலாவது தொலைத்தொடர்பு இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.

★1877-ஸ்கொட்லாந்தில் பிளான்டையர் சுரங்க விபத்து 207 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

★1878-செயற்கை ஒளிக்கு கீழ் நடைபெற்ற முதலாவது ரக்பி போட்டி இங்கிலாந்தின் சால்போட் நகரில் நடைபெற்றது.

★1924-பன்னாட்டு டோஸ்ட்மாஸ்டர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

★1943-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் காசெல் நகரம் மீது பிரித்தானிய விமானப்படை குண்டு வீச்சு நடத்தியதில் 10 ஆயிரம் பேர் உயிரிழந்ததுடன் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்.

★1944-ஜேர்மனியின் ஆச்சென் நகரம் நட்பு நாடுகளிடம் வீழ்ந்தது. நட்பு நர்டுகளிடம் வீழ்ந்த முதலாவது ஜேர்மன் நகரம் இதுவாகும்.

★1949-சோவியத் ஒன்றியம் அதன் முதலாவது அணுகுண்டை வெடிக்கச் செய்தது.

★1953-லாவோஸ் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★1957-வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்காவின் முதல் போர்ச் சாவு.

★1960-மாலி பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★1964-பல்கட்சிக் குழு கனடாவின் கொடிக்கான வடிவமைப்பை முடிவு செய்தது.

★1964-சான்- போல் சார்ட்ரேக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. எனினும் அவர் அதனைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.

★1965 -இந்தியா- பாகிஸ்தான் இடையான இரண்டாம் காஷ்மீர் போர் முடிவுக்கு வந்தது.

★1968- நாசாவின் அப்பலோ 7 விண்கலம் பூமியை 163 தடவைகள் சுற்றிய பின்னர் அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.

★1970- துங்கு அப்துல் ரகுமான் மலேசியாவின் பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.

★1987- ஈழப்போர்: யாழ்ப்பாணம் அராலித் துறையில் இந்திய அமைதிப் படையின் உலங்குவானூர்தி தாக்கியதில் பல பயணிகள் கொல்லப்பட்டனர்.

★2001-PSLVC- மூன்று விண்கலத்தை இந்தியா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

### பிறப்பு

★1919-டோரிஸ் லெஸ்சிங், 2007 ஆம் ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர்

### இறப்புக்கள்

★1906-பால் செசான், பிரெஞ்சு ஓவியர்(பி.1839)

★1925-அ.மாதவையா ,தமிழக எழுத்தாளர், நாவலாசிரியர், பத்திரிகையாசிரியர் (பி.1872)

### அ.மாதவையா



இவர் தமிழின் ஒரு முன்னோடி எழுத்தாளர், நாவலாசிரியர், பத்திரிகையாசிரியர் எழுத்தின் மூலம் சமூக சீர்திருத்தம் கொண்டு வருவதில் நம்பிக்கை உடையவர். **பத்மாவதி சரித்திரம்** என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர். ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் புலமை பெற்றவர்.

### வாழ்க்கை சுருக்கம்

திருநெல்வேலி அருகே உள்ள பெருங்குளம் என்ற கிராமத்தில் பிறந்தவர். தன் பாடசாலைப் படிப்பை திருநெல்வேலி மாவட்டத்தில் 1887 ஆம் ஆண்டில் முடித்தார். சென்னையில் உள்ள கிறிஸ்தவ கல்லூரியில் இளங்கலை மேற்படிப்பு தொடர்ந்தார். இங்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றார்.

அக்காலத்தில் இருந்த அவர் குடும்ப விழுமியங்களுக்கு ஏற்ப தன்னுடைய பதினைந்தாவது வயதிலேயே (1887) மாதவையாவுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது.

மாதவையா தனது இருபதாம் அகவையிலேயே பத்திரிகைகளுக்கு எழுதும் பழக்கம் கொண்டிருந்தார்.

ஆனால் அத்தொடர் இடையில் சில நாட்கள் தடைப்பட்டு பின் தொடர்ந்து வந்தது. அத்தொடர் 1903 ஆம் ஆண்டு முத்து மீனாக்ஷி என்ற பெயரில் நாவலாக வெளிவந்தது. 1898 ஆம் ஆண்டு பத்மாவதி சரித்திரம் என்ற நாவலின் முதற்பகுதியும் 1899 ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதியும் மாதவையாவால் எழுதப்பட்டது.

### குடும்பம்

அ.மாதவையாவுக்கு ஐந்து பெண் மற்றும் மூன்று ஆண் என்று எட்டுப்பிள்ளைகள். அவருடைய பிள்ளைகளான மீனாக்ஷி, தியாகராஜன், கிருஷ்ணன், முக்தா வெங்கடேஷ் என்ற முத்துலக்ஷ்மி ஆகியோர் பிரபலமானவர்கள்.

### இறப்பு

சென்னைப் பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினராக மாதவையா 1925 ஆம் ஆண்டு ஒக்டோபர் 22 ஆம் திகதி தேர்வு செய்யப்பட்டார். அப்போது தமிழைக் கட்டாய பாடமாக இளங்கலை (B.A) பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று சொற்பொழிவினை நிகழ்த்தினார். அன்று தன் ஐம்பத்தி மூன்றாம் வயதில் மாரடைப்பால் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரத்பொன்சேகாவை தூக்கிலிடுவேன் என்று சொன்னதை இதுவரை நிறைவேற்றாததைத் தவிர, கோத்தபாயாவின் விருப்பம் அத்தனையையும் ஜனாதிபதி தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றார்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு தமிழ்தேசிய கூட்டமைப்பினர் நாடு திரும்பி விட்டனர்.

இந்த விஜயம் வெற்றியளித்ததா என்று கேட்டால் அதற்குப் பதிலாக இருவரது கூற்றை மட்டுமே மேற்கோள் காட்ட முடியும்.

மன்மோகன் சிங்கின் உத்தரவாதம் முதலாவது.

அடுத்தது, இந்தியாவின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்ற எஸ். எம். கிருஷ்ணாவின் பொறுமையான கருத்து.

இந்தியா எங்கள் மீது எந்த அழுத்தங்களையும் தெரிவிக்கவில்லை. தெரிவுக்குழுவுக்கு போவது பற்றி நாங்கள் எந்த உத்தரவாதமும் வழங்கவில்லை என்ற அர்த்தப்பட

மைப்பினர், வடக்கு-கிழக்கு இராணுவத்தேவைகளுக்கு சீனா வழங்கி வரும் உதவிகளையிட்டு தங்கள் அதிருப்தியை மென்மையாக வெளிப்படுத்தியிருந்தார்கள்.

முக்கியமாக வடக்கில் பொது மக்களின் சொத்துக்களை இலக்கு வைத்து இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சீனா உதவி வருவதை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இவ்விடயத்தில் சீனா நிதானமாக நடக்கவேண்டிய அவசியத்தை விளக்கிக்கூறியதுடன், இலங்கை அரசுக்கு விடயத்தை எடுத்துக் கூறி தீர்வு காணுமாறும் சீனத் தூதுவரிடம் கூட்டமைப்பினர் கேட்டனர்.

இவ்விடயத்தில் நிதானமாக எந்த உத்தரவாதமும் அளிக்காத சீனத் தூதுவர், இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை ஊடாக தீர்வுகாணுமாறு கூட்டமைப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் தங்களின் இந்திய விஜயம் தொடர்பாக கூட்டமைப்

கென மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எவ்வளவுதான் உகதவிகளை அமெரிக்கா வழங்கினாலும் அதன் கவலையும் கரிசனையும் எந்தளவிற்கு இலங்கையின் காதிற்குள் செல்லும் என்பது பதில் பெறமுடியாத கேள்வி.

இச்சந்தர்ப்பத்தில், அமெரிக்காவில் இந்தியாவின் இராஜதந்திரியாக இருக்கும் நிருபமாராவ், ஆனந்தவிகடன் சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் தெரிவித்த கருத்து, பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

வன்னி யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்படவில்லையென்று மகிந்த ராஜபக்சவும் அவரது அமைச்சரவையும் சொல்லி இந்தியாவை ஏமாற்றி விட்டார்கள் என்ற கருத்துப்பட அப்பட்டமான பொய்யை நிருபமாராவ் விசிறியுள்ளார்.

முன்பு இலங்கையின் தூதுவராகவும், இந்தியாவின் வெளியுறவுச் செயலராகவும், இப்போது, அமெரிக்

நட்புக்கு எதிராக உண்மையைக் கூறுவதென்பது கஷ்டம்தான்.

கூட்டமைப்பினர் இந்தியாவில் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கையில் கொழும்பில் வெளியான இரண்டு கருத்துக்களை சாதாரணமானவையாக ஓரம் தள்ளிவிட முடியாது.

இந்தியாவிடம் போனால் என்ன? அமெரிக்காவிடம் போனால் என்ன? இங்கு எதுவும் நடக்காது. கூட்டமைப்பினர் இங்குதான் வரவேண்டும். நாங்கள் தீர்மானிப்பதே முடிவு. அதனையே தமிழர் ஏற்க வேண்டும். என்று மூன்று சிங்கள அமைச்சர்கள் பகிரங்கமாக சவால் விட்டுள்ளனர். இவைகளுக்குப்பல படிகள் மேலே சென்று, பதின்மூன்றாவது அரசியல் திருத்தத்தை அரசியலமைப்பிலிருந்து முற்றாக நீக்கிவிட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதனை முன்வைத்திருப்பவர் வேறுயாருமல்ல. பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவே தான். தமது அண்ணன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக மாகாண சபைகளை நிர்வகிப்பதற்காக பதின்மூன்றாவது அரசியல் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

மாகாண சபைகளின் அதிகாரத்தைக் குறைக்கும் திவிநெகும சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் ஒருபுறத்தில் துடிக்கிறது. பதின்மூன்றாவது திருத்தத்தை தமிழர்கள் ஏற்றார்களோ இல்லையோ அதுவொரு தீர்வுக்கு வழிவகுக்குமோ இல்லையோ, அதனை ஒரு தடைக் கல்லாகவே அரசாங்கம் பார்க்கிறது.

இதனை அமுல்படுத்துமாறு இந்தியா அடிக்கடி வலியுறுத்தி வருவதும் இதற்கொரு காரணம்.

அதற்காகவே பதின்மூன்று பிளஸ் (பதின்மூன்றுக்கும் அப்பாற் சென்று) தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக மஹிந்த ராஜபக்ச பல தடவை இந்தியாவுக்கு உறுதியளித்திருந்தார்.

ஆனால், அதனை முற்றாக அகற்றிவிட உயர்மட்டத்தில் இப்போது ஆலோசிக்கப்படுகின்றது.

சரத் பொன்சோகாவை தூக்கிலிடு

# பேரினத்தின் முற்றுகைக்குள் முடிவின்றி முனகியபடியே... இன்னும் எத்தனை காலம் ?

கூட்டமைப்பு குழுவிற்கு தலைமை தாங்கிய இரா.சம்பந்தன் தெரிவித்ததையும் இங்கு கருத்திலெடுக்கலாம்.

இவைகளுக்கு அப்பால் எங்குமே வெளிவந்திராத தகவல் ஒன்றை சிங்கள பேரினவாதத் தலைவர்களில் ஒருவரான குணசேகரா வெளிக் கொணர்ந்துள்ளார்.

புதுடெல்லியிலுள்ள இலங்கையின் தூதுவர் பிரசாத் காரியவசம், கூட்டமைப்பினருக்கு அங்கு வைத்து போசன விருந்தளித்ததை சுட்டிக் காட்டியுள்ள அவர், இலங்கை அரசுக்கு எதிராக தொடர்ந்து பரப்புரை செய்துவரும் கூட்டமைப்பினருக்கு எதற்காக இலங்கைத் தூதுவர் விருந்தளித்தார் எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கையின் இந்தியத் தூதுவர் நிச்சயமாக தனிப்பட்ட முறையில் இந்த விருந்தை அளித்திருக்க முடியாது.

அதேசமயம் கொழும்புத் தலைமைப்பீட அனுமதி இல்லாமல் இதனை அவரால் வழங்கியிருக்க முடியாது.


இந்த விருந்துபசாரம் தொடர்பாக கூட்டமைப்புத் தரப்பிலிருந்து எந்தவொரு மறுதலிப்போ அல்லது கருத்தோ இதுவரை வெளிவரவில்லை.

இது ஒருபுறமிருக்க, கூட்டமைப்பின் இந்திய விஜயத்தையடுத்து சில முக்கியமான அறிக்கைகளும், கருத்துக்களும், சந்திப்புகளும், நிகழ்வுகளும் தொடருவதை அவதானிக்க முடிகின்றது.

• கொழும்பிலுள்ள சீனத்தூதுவர் வூஜியான்கூவை கூட்டமைப்புக் குழுவொன்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது. சீனத் தூதுவர் ஒருவரை கூட்டமைப்பினர் சந்தித்தது என்பது எமது நினைவுக் கெட்டியவரையில் அண்மைக்காலங்களில் இதுவே முதலாவதாக இருக்க வேண்டும்.

இந்தியா சென்ற குழுவில் இடம் பெற்ற ஏழுபேரில் அ.விநாயகமூர்த்தி, பொன்செல்வராஜா எம்.பிக்கள் தவிர மிகுதி ஐவரும் சீனத் தூதுவருடனான சந்திப்பில் பங்கேற்றனர்.

உள்நாட்டு அபிவிருத்திப் பணிகளுக்கு நன்றி தெரிவித்த கூட்ட



# 13வது திருத்தமும் பறிபோகும் நிலை இந்தியாவால் ஆகப்போவது என்ன?

பினர் மறந்தும்கூட எதுவும் தெரிவிக்கவில்லை.

ஆனால், இந்தியா வழங்கிய ஆலாசனைக்கு இணங்கவே கூட்டமைப்பினர் சீனத் தூதுவரைச் சந்தித்திருக்கலாம் என்ற கருத்து இலங்கை மற்றும் சீனத் தூதரக வட்டாரங்களில் நிலவுகின்றது.

மெனிக்பாம் முகாமை அவசரமாக இழுத்து மூடிவிட்டு, அங்கிருந்த மக்களை வசதிகளற்ற காட்டிற்குள் தள்ளிவிட்டதற்கு அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் கவலையை கரிசனையான அறிக்கை வடிவில் வெளியிட்டுள்ள கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அந்த மக்களுக்கு தொடர்ந்து உதவ தயாராகவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க உதவி அதன் யு.எஸ். எயிட்ஸ் (USAID) ஊடாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு மூன்று அமைப்புகள் வாயிலாக இப்போது [illegible]

காவில் இந்தியத் தூதராகவும் இருக்கும் இவருக்கும் இலங்கையின் யுத்த கால டயறி முழுமையாகத் தெரியும். இந்தியாவுக்காகவே புலிகளுடன் யுத்தம் புரிந்தோம் என்று எத்தனையோ தடவை ராஜபக்ச சகோதரர்கள் கூறியதை இந்தியா ஒருபோதும் மறுக்கவில்லை.

ஐக்கிய நாடுகள்சபை நிபுணர் குழு அறிக்கை, மன்னார் ஆயரின் புள்ளி விபர ஆவணம், சனல்-4 இலங்கையின் கொலைக்களம் காணொளி, பிரான்சிஸ் ஹரீசனின் *சடலங்கள் இன்னமும் எண்ணப்படுகின்றன*, என்னும் நூல் ஆகியவை பற்றி எதுவுமே தெரியாதவர் போல நிரூபமாராவ் கண்களை மூடிக்கொண்டு, தமிழரின் காதில் பூவைக்க எத்தனிக்கின்றார். இவ்வருட முற்பகுதியில் அமெரிக்காவின் தூதுவர் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்னராக இலங்கை சென்று மஹிந்தவை தனியாக சந் [illegible]. நிரூபமாராவினால்

வேன் என்று சொன்னதை இதுவரை நிறைவேற்றாததைத் தவிர கோத்தபாயவின் விருப்பம் அத்தனை யையும் மஹிந்த ராஜபக்ச தொடர்ந்து நிறைவேற்றிவருகி[illegible].

அந்த வழியில் பதின்மூன்றாவது அரசியல்திருத்தத்திற்கு மஹிந்த அரசு அரோகரா கூறுமானால் இந்தியா சந்திக்கும் மிகப்பெரிய அவமானமாகவே இது அமையும்.

இது மட்டுமன்றி இருநாடுகளின் ஒப்பந்தத்தில் எஞ்சியிருக்கும் சொச்சமும் இல்லாமற்போகும். அப்போது இந்தியாவால் என்ன செய்ய முடியும்?

சிங்கள பேரினவாத முற்றுகைக்குள் சிக்கித் தவிக்கும்தமிழ்மக்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு, பொதுவாக அரசியலில் நுண்ணறிவை வளர்த்துக்கொள்வதும், அதன்மீது அக்கறைப் படுவதும், மக்கள் சக்தியின் மகா பலத்தை உணர்ந்துகொள்வதுமே இன்றுள்ள முதல் தேவையாகும்.

-பனங்காட்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசசார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டம்

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு சக்திகளுக்காக சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உளவுப் பணியில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டின் இரகசியங்களை வெளிநாட்டு சக்திகளுக்கு வழங்கி அதன்மூலம் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதி பெற்றுக் கொள்கின்றன .

சிவில் நலன்புரி நடவடிக்கைகள் என்ற போர்வையில் போர் இடம்பெற்ற காலத்தில் செய்மதி தொலைபேசிகள் மூலம் 275 அரச சார்பற்ற ஊழியர்கள் உளவுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஒரு மேற்குலக நாடு 366 டொலர்களை வழங்கியுள்ளது. புதிய சட்டங்கள் நாடாளுமன்றில் அமுல்படுத்தப்பட்டால் அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்கக் கூடிய அதிகாரம் கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# அவுஸ்திரேலியா செல்வதற்கு போலியாக நடித்த கும்பல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு சென்று கொண்டிருக்கும் இலங்கையர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேளையில் அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் அண்மை தீவுகளில் முகாம் அமைத்து தங்க வைக்கின்றது அவுஸ்திரேலிய அரசு.

இது இவ்வாறு இருக்க, கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆழ்கடலில் சில பெண்களும் குழந்தைகளும் உட்பட பலர் பயணித்த படகை சில கடற்கொள்ளையர்கள் இடைமறித்து தம்மை தாக்குவதாக நாடகமாடியுள்ளனர். ஒருவர் தம் கழுத்தையும் வயிற்றையும் தானே காயப்படுத்தி தம்மை கடற்கொள்ளையர்கள் தாக்குவதாகவும் தம்மால் இலங்கையில் வசிக்க முடியாதெனவும் பொய்கூறி நாட்டுக்குள் வந்தனர் என அறிந்ததில் அவுஸ்திரேலிய அரசு அதிர்ந்து போயுள்ளது.

இவ்வாறு துரத்தி நாடகமாடிய கடற்கொள்ளையர்கள் அவுஸ்திரேலியாவுக்கு என மக்களை ஏற்றிய படகின் எஞ்சினை செயலிழக்கச் செய்தபின் அவுஸ்திரேலிய கடற்படையைப் பார்த்து குறிப்பித்த ஒரு படகினைக் காட்டி இவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள் இல்லை யேல் இவர்களுக்கு எங்களால் ஆபத்து என கட்டளை இட்டுள்ளனர்.

இவ்வாறு பயணித்தவர்கள் அனைவரும் சிங்களவர் என தெரிய வந்துள்ளது. (அ-2)

# கடல் பாதுகாப்பு மாநாடு

(கொழும்பு)

இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு இடையிலான கடல் பாதுகாப்பு தொடர்பான மாநாடு காலியில் நடைபெற்று வருகின்றது. இம்மாநாட்டில் கப்பல் நடமாட்டங்கள், சுனாமி எச்சரிக்கை, கடற்கொள்ளையர்களுக்கு எதிரான நடவடிக்கைகள், கூட்டு கடற்படைப் பயிற்சிகள் போன்றவை தொடர்பில் ஆராயப்படுகின்றன.

இந்த நிலையில் கூட்டத்தின் இறுதியில் கடலில் சட்டவிரோத அத்துமீறல்களை முத்தரப்பு பொறிமுறை ஒன்றும் ஏற்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடல் பாதுகாப்பு பணிப்பாளர் கே. ஆர். நூட்டியால் இலங்கையின் சார்பில் கடற்படை பணிப்பாளர் ஜயந்த பெரேரா மற்றும் மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் லியாஸ் ஹூசைன் ஆகியோர் இதில் பங்கேற்கின்றனர். (அ-2)

# குளவி கொட்டியதால் 32 பேர் ஆஸ்பத்திரியில்

(கொழும்பு)

பொகவந்தலாவை மொரா தோட்டப்பகுதியில் குளவிகளின் தாக்குத லுக்கு உள்ளான பெண் தோட்டத் தொழிலாளர்கள் 32 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர்.

பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டதனால் உயிராபத்துக்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது 8 பேர் தங்கி சிகிச்சை பெற்று வரும் நிலையில் ஏனையவர்கள் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

தேயிலை செடிகளுக்கிடையில் காணப்பட்ட பெரிய மரத்தில் இருந்த குளவிக் கூட்டை பறவையொன்று தட்டி சென்றதால் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (அ-2)

# பிரதேச செயலகங்களில் சட்ட உதவி நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து நடத்தும் சட்ட உதவிகள் நடமாடும் சேவை இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் அதே தினத்தன்று பி.ப ஒரு மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை துணுக்காய் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

இதில் இலவச சட்ட ஆலோசனை, சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வுகள், காணி உறுதிப் பிணக்குகளுக்கான ஆலோசனை, சொத்துக்களை பெற்றுக் கொடுத்தல், தாபரிப்பு, குடும்பவன்முறை , மரணச் சான்றிதழ் பெறல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் சிரேஷ்ட சட்டத்தரணிகளால் இலவசமாக ஆலோசனைகள், வழக்குப் பதிவுகள் வழங்கப்படும்.

எனவே இதில் அனைவரும் பங்கு கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-267)

# ஓரினச்சேர்க்கையாளர்களால் பாலியல் தொற்று அதிகரிப்பு

## வருடத்தில் இரண்டு இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வருடமொன்றிற்கு 60 ஆயிரம் முதல் 2 இலட்சம் பேர் வரை பாலியல் நோய்த் தொற்றுக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வுகளின் மூலமே தெரியவந்துள்ளதாக தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் விசேட நிபுணர் டாக்டர் ஜீ.வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பலர் குறித்த நோய்த் தாக்கத்தினால் பீடிக்கப்படுகின்ற போதிலும் சுமார் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேர் மாத்திரமே இது தொடர்பான சிகிச்சைகளுக்காக வைத்தியர்களை நாடுகின்றனர்.

இந்நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் வெட்கம், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுதல், அறியாமை போன்ற காரணங்களால் உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதில்லை என்றும் டாக்டர் வீரசிங்க குறிப்பிட்டார். எயிட்ஸ் தொற்றானது தாயிடமிருந்து குழந்தைகளுக்கு தொற்றுவதால் கர்ப்பிணிப் பெண்கள் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்தது.

இலங்கையில் எயிட்ஸ் நோயானது ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் காரணமாகவே அதிகளவில் பரவுகின்றது என கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வானம் கீழே விழுவதில்லை

பப்பி ஒரு நாய்க்குட்டி. அது பிறந்து ஆறு மாதங்களே ஆகியிருந்தன. பப்பியோடு கூடப் பிறந்த குட்டிகள் நான்கு.

அந்த நான்கும் வேறு வேறு வீடுகளில் வளர்ந்து வருகின்றன. பப்பியின் அழகுகண்டு வீட்டு எஜமானன் பப்பியை மட்டும் அதன் தாயுடன் சேர்ந்து வளரும் படி வைத்துக் கொண்டான்.

பால் இருந்ததோ இல்லையோ பப்பி இன்னும் தன் தாய்மடியில் பால் குடித்துக்கொண்டுதான் இருந்தது.

வழக்கம்போல் அன்றும் தாயிடம் பால்குடித்துவிட்டு ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தது பப்பி.

விளையாட்டின் முடிவில் களைத்துப்போய் கால்களைத் தரையில் பரப்பிப் படுத்துக்கொண்டு விட்டது. அப்படிப்படுத்துக்கொண்டே தற்செயலாய் தன் தலையை மட்டும் நிமிர்த்தி மேலே பார்த்தது. அங்கிருந்தது நீல நிறத்தில் வானம். பப்பிக்குப் பெரும் அதிசயம்.

அம்மா... அம்மா மேலே பார்த்தாயா? நீல நிறத்தில் அங்கே தெரிவது என்னம்மா? பப்பி தன் தாயிடம் கேட்டது.

அது வானம் மகனே! அதை ஆகாயம் என்றும் சொல்வார்கள். நீ இன்றுதான் அதைப்பார்த்தாயா? தாய் நாய் பப்பியிடம் கேட்டது.

மேலே வானம் இருக்கின்றதென்று நீ எனக்குச் சொல்லவில்லையே அம்மா.

அந்த வானம் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறதே! அது வந்து என் தலையில் விழுந்துவிட்டால் நான் என்ன செய்வது? பப்பி பயபீதியுடன் தாயிடம் கேட்டது.

தன் மகனைப் பார்த்து சிரித்தது அந்த நாய்த்தாய்.

வானம் ஒருநாளுமே கீழே வந்து விழுந்ததில்லை. காலம் காலமாக அது பூமிக்கும் மேலே தான் இருக்கிறது. நீ வீணாகக் கற்பனை செய்து பயந்து சாகாதே என்று சிரித்துக்கொண்டே அது பப்பிக்குப் பதில் சொன்னது.

தாயின் பதில் பப்பிக்குச் சரியாகப்படவில்லை.


இந்த அம்மாவுக்கு நான் சொல்வது விளங்கவில்லையே.. இந்தப் பெரிய வானம் என் தலைக்கு மேலே இருக்கும்போது நான் எப்படிப் பயப்படாமல் இருப்பதாம்? என்றோ ஒருநாள் அது என் தலையில் வந்து விழத்தான் போகிறது! அதனால் நானும் நசுங்கிச் செத்துவிடத்தான் போகிறேன். இது ஏன் இந்த அம்மாவுக்குப் புரியவில்லை?

பப்பி பலத்த யோசனையுடன் வானத்தைப் பார்த்தபடியே படுத்துக் கிடந்தது.

இதுவரைக்கும் வானம் என்னவோ நீல நிறத்தில்தான் இருந்தது. ஆனால் இப்போது அது மெதுவாக இருட்டிக்கொண்டுவர ஆரம்பித்தது.

மெல்லத் தொடங்கிய அந்த இருள் முழு வானத்தையுமே கவ்விக்கொண்ட போது.

அம்மா... அம்மா வானம் முழுவதும் இருண்டுபோய் விட்



டது. கன்னங்கரேல் என்று ஒரே கறுப்பாகிக்கொண்டு வருகிறது. பார்த்தாயா? அம்மா! வானத்தைப் பார்த்தாயா? என்று அலறித் துடித்து எழுந்து நின்றது பப்பி.

ஏன் இப்படிப் பதறுகிறாய்? மாரி காலம் தொடங்கப்போகிறது மகனே! அதற்கான அறிகுறிதான் இது.

நீ பிறந்தது கோடை காலத்தில் அல்லவா? அதனால்தான் இந்தக் காட்சி உனக்குப் புதுமையாக இருக்கிறது. கொஞ்சம் பொறுத்திருந்து பார்.

சற்று நேரத்தில் மழை பெய்யும். அப்போது நீ உன் கூண்டுக்குள்ளே போய் இருந்து கொண்டு வேடிக்கை பார்க்கலாம் என்றது அம்மாநாய்.

இந்தச்சமயத்தில் குளிர்க்காற்று வீசத் தொடங்கியது. வானத்தில் பளிச் என்று ஒரு மின்னல் வெட்டியது.

தொடர்ந்து படபடவென்று இடியும் இடித்தது. மின்னல் வெளிச்சத்தில் கண்கூசிப்போய் நின்ற பப்பியின் காதுகளில் அந்த இடிச்சத்தம் பெருவெடியென இறங்கியது.

பப்பிக்கு இனியும் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?

வாள்... வாள் என்று கத்திக் கொண்டே தன் வாலைச் சுருட்டிக் கொண்டு எழுந்து அது ஓடத் தொடங்கியது.

ஓடாதே மகனே... ஓடாதே! அந்த இடி வெறும் சத்தவெடிதான். ஆபத்து ஒன்றும் இல்லை. ஓடாதே மகனே... ஓடாதே! என்று அவசரமாய்ச் சொல்லி பப்பியை தடுத்து நிறுத்த முயன்றது தாய்நாய்.

இல்லையில்லை. நான் நம்பமாட்டேன். இனி ஒருநாளும் உன் பேச்சை நான் நம்பமாட்டேன். அந்த வானம் என் தலையில் விழுவதற்குள் நான் எங்காவது ஓடித் தப்பித்துக் கொள்கி றேன். என்னை விடு நான் போகிறேன்... என்னை விடு நான் போகிறேன் என்று கத்திக் கொண்டே நான்கு கால் பாய்ச்சலில் தொடர்ந் தும் ஓடிக் கொண்டிருந்தது பப்பி.

ஓடும் தன் குட்டியை கவலையுடன் பார்த்துக் கண்ணீர் வடித்தது அம்மா நாய்.

இப்போது சடசடவென்று பெரும் சத்தத்துடன் மழைத் துளிகள் மண்ணில் வந்து விழத் தொடங்கிவிட்டன.

ஐயோ... ஐயையோ வானம் விழுமுன்னால் தண்ணீர் வந்து விழுகிறதே. இந்த தண்ணீரோடு சேர்ந்து தான் அந்த வானமும் விழப் போகிறது என்று சொல்லிப் பதறித் துடித்தபடியே பப்பி பெரும் வேகம் எடுத்து ஓடத் தொடங்கி விட்டது.

வழியில் கண்டவரிட மெல்லாம் வானம் கீழே விழப் போகிறது. அதுதான் நான் தப்பிப் பிழைப்பதற்காக ஓடிக் கொண் டிருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டுதான் அது ஓடிக் கொண் டிருந்தது. தன்னோடு சேர்ந்து அவர்களும் ஓடித் தப்பித்துக் கொண்டுவிட வேண்டும் என்ற மிக நல்ல எண்ணம் பப்பியிடம் இருந்தது.

மின்னல் மின்னுவதும் நிற்கவில்லை. இடி இடித்தும் முடியவில்லை. மழை பெய்வதும் ஓயவில்லை. பப்பியும் ஓடுவதை நிறுத்தவில்லை.

வெற்றிபெறத் துடிக்கும் ஒரு ஒலிம்பிக் ஓட்டப்போட்டி வீரனைப் போல மிக நீண்ட தூரத்தை ஓடிக் கடந்து கொண்டிருந்தது பப்பி.

மழையில் நனைந்து குளிரில் விறைத்து மூச்சிறைத்து பப்பியின் வாயில் நுரை தள்ளிக்கொண்டிருந்தது.

ஆயினும் அது ஓடிக்கொண்டு தானிருந்தது.

சுமார் எத்தனை கிலோ மீற்றர் தூரத்தை அது ஓடிக்கடந்திருக்கும் என்பதை அளந்து பார்ப்பதற்கு ஆட்கள் இல்லை.

மின்னல், முழக்கம், மழை எல்லாமே ஓய்ந்த போதுதான் பப்பியும் ஓடுவதை நிறுத்திக் கொண்டது. அதன்பின்புதான் நின்று நிதானமாக வானத்தையும் அண்ணார்ந்து பார்த்தது. அப்பாடா வானம் மேலே தான் இருக்கிறது.

இத்தனை நடந்தும் அந்த வானம் அங்கேயே இருக்கிறது என்றால்... அது எத்தனை பெரிய அதிசயம்? நல்லவேளை என் தலை தப்பியதே... பப்பி தனக்குள் யோசித்துக்கொண்டே தன் தலையை ஒரு தடவை உதறிப் பார்த்துக்கொண்டது.

பப்பிக்கு இப்போது பசித்தது. தாகத்தால் நாவரண்டு போனது. உடனே அம்மாவின் நினைவும் வந்தது.

அதனால் வந்த பாதையால் திரும்பி ஓடத்தொடங்கியது பப்பி. வழிதவறிப்போகாமல் இருப்பதற்காக வழியில் தன் பாதச்சுவடுகள் பதிந்த இடங்களை முகர்ந்து முகர்ந்து பார்த்துக்கொண்டுதான் அது ஓடிக் கொண்டிருந்தது.

வீட்டுவாசலில் அம்மாநாய் கவலையுடன் காத்துக் கொண்டிருந்தது. பப்பியைக் கண்டதும் அது மகிழ்ச்சிக்குரல் கொடுத்தது. வந்துவிட்டாயா என் மகனே எனக்கேட்டு தன் முன்னங்கால்களால் அதைக் கட்டியணைத்து முத்தமிட்டது.

அம்மா நல்லவேளை வானம் கீழே விழவேயில்லை என்றது பப்பி.மகனே நான் சொல்வதைக் கேள். இனிமேல் ஒருநாளும் இப்படி வீணாக ஓடிக்களைத்துப் போகாதே.

இந்த உலகத்தில் வானம் இல்லாத இடமே இல்லையடா. நீ எத்தனை தூரம் ஓடினாலும் அது உன் தலைக்கு மேலேதான் இருக்கும்.

அதுதான் இயற்கையின் நியதி... இறையாட்சியின் அற்புதக்காட்சி... நட்சத்திரங்கள் கீழே உதிர்ந்தாலும் வானம் கீழே விழுவதில்லை.

இனியாவது அம்மாவின் சொல்லைக்கேட்டு நடப்பாயா? என்று பப்பியின் அம்மா பப்பியைக் கேட்டது.

பப்பியும் அம்மா சொன்னதை ஏற்றுக்கொண்டு... அம்மாவின் மடிக்குள் புகுந்து பால் குடிக்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி பணி கிராமத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(அக்கராயன்)

ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தும் கிராமங்களிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அக்கராயனில் பத்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடத்தினை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பள்ளிகளின் செயற்பாடுகள் மிகச் சிறப்பாகவும் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையை ஊட்டும் வகையிலும் செயற்பட்டு வருகின்றன. அதில் இம்மாவட்ட பெற்றோர்களும் ஆர்வம் காட்டுகின்றார்கள். எனவே தொடர்ந்தும் இவ்வாறு திறக்கப்படும் முன்பள்ளிகளை மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் கடந்த காலங்களில் அனுபவித்த வலிகள், துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணமாக விளங்கியது கல்வியே. ஆனால் தொடர்ந்து நாம் துன்பங்களை சுமக்கின்ற சமூகமாக வாழ முடியாது.

ஆகவே நாம் கல்வியால் மேம்பட்ட சமூகமாக மாற்றம் பெற வேண்டும். அந்த இலக்கினை எட்டுவதற்காக கிடைக்கப்பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தையும் வளங்களையும் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தும் கிராமப்புறங்களிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கேற்ப திட்டங்கள் வரையப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (அ-2)

# நவராத்திரி

**கல்வி**

வற்றாத பெரும் செல்வம்
மாண்புமிகு கல்வியதை
வாரி வழங்குகின்ற
கல்விக்கதிபதியே கலைமகளே
இப்பிறப்பில் கற்ற கல்வி
எழு பிறப்புமுதவி வரும்
ஒப்பரிய கல்வி யினால்
உயர்ந்தோர் பலராவர்
கற்றபடி ஒழுகி வரல்
கற்றவரி ன்கடன் ஆகும்
வற்றாத பெரு நிதியை
வளர்ப்ப துமோர் கடனாகும்
வள்ளுவனின் குறள் கற்று
மனதினில் பதிய வைத்து
கள்ளமிலா மனத்தினராய்
கல்வியினை வளர்ப் போமே

த.சோபிதா, யாழ்.தே.க.க



# இலங்கையில் நாளொன்றுக்கு ஐவர் மீது பாலியல் வன்முறை

## புதிய ஆய்வில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் நாளொன்றுக்கு ஐந்து பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதாக புதிய ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகப் பெண் சனத்தொகையில் ஒரு பில்லியன் பெண்கள் நாளாந்தம் துன்புறுத்தப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

சர்வதேச மகளிர் அமைப்பு மற்றும் இலங்கை மகளிர் விவகார அமைச்சு ஆகியன கூட்டாக இணைந்தே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

பெண்கள் படுகொலை செய்யப்படுதல், பாலியல் வன்முறை, வீட்டு வன்முறை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பெண்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

பெண்களுக்கு எதிராக ஆண்களே அதிகளவு அழுத்தங்களை பிரயோகிப்பதாகவும் வன்முறைகளுக்கு எதிராக ஆண்களை அணிதிரட்டும் நோக்கில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# புதுப்பொலிவுடன் குதிரைப்பந்தய பார்வையாளர்கூடம் திறந்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பு கறுவாத்தோட்டத்தில் அமையப் பெற்ற 120 வருடங்கள் பழைமைவாய்ந்த குதிரைப் பந்தயத்திடல் பார்வையாளர் கூடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, கொழும்பு மாநகர சபை மேயர் எம்.ஜே.எம். முஸம்மில் ஆகியோரினால் இக்கட்டடம் நேற்றுமுன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது.

குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுகின்ற வீரர்களின் ஓய்வறைகளாகவும் விசாரணை அறைகளாகவும் இருந்த பகுதிகள் தற்சமயம் மக்டொனல், லக்சல போன்ற பிரபல நிறுவனங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை புற்றரை பராமரிப்பு கழகத்தின் கீழிருந்த கறுவாத்தோட்ட குதிரைப்பந்தய தடாகம் தற்பொழுது பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கொழும்பு நகரை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் இராணுவ பொறியியல் துறையினரால் இப்பழைய கட்டடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. 125 மில்லியன் ரூபாய் செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இக்கட்டட நிர்மாணத்தில் சுமார் 300 இராணுவத்தினர் ஈடுபட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

இச் சிறிய பார்வையாளர்கூட கட்டடமானது 450 மில்லியன் ரூபா வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டதாகும். ஏனைய வேலைத் திட்டமான ரக்பி மைதானம், பேரரங்கு போன்றவற்றின் நிர்மாண வேலைகள் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (அ-2)

# மாணவன் விரும்பும் நடத்தையை அவனிடமே ஏற்படுத்த வேண்டும்

## சிறந்த ஆசிரியருக்கு அதுதான் அழகு-க.பேணாட்

(பூந்தோட்டம்)


அன்பும் பண்பும் மிக்கது ஆசிரியத்துவம். தான் விரும்புகின்ற நடத்தையை மாணவர்களிடத்தே ஏற்படுவதை விட மாணவர் விரும்பும் நடத்தையை மாணவர்களிடத்தே ஏற்படுத்துவதே சிறந்த ஆசிரியர் என வவுனியா கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க.பேணாட் தெரிவித்தார்.

தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர், எனக்கு ஆரம்பக்கல்வியை கற்பித்த ஆசிரியரை நான் தெய்வமாக வணங்குகின்றேன். ஏனெனில் அந்த ஆசிரியரை நான் வாழ்நாளில் சந்தித்திருக்காவிடின் நான் இன்று உங்கள் முன்னிலையில் ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவராக இருந்து உரையாற்றியிருக்க முடியாது.

பாடசாலைக்கு செல்வதற்கு விரும்பாத என்னை, பாடசாலையில் எந்நேரமும் அழுது கொண்டிருந்த என்னை அரவணைத்து, அன்புகாட்டி ஓர் தாயைப்போல் பராமரித்து எனக்கு கற்றலில் விருப்பம் ஏற்பட வழிகாட்டியவர் எனது ஆரம்பக்கல்வி ஆசிரியரே.

வாழ்க்கையில் திருப்பு முனையை ஏற்படுத்திய ஆசிரியர்களை யாருமே என்றும் மறக்க முடியாது. ஒரு மனிதன் தன்னையறிய உதவும் ஆசிரியர்களையும் அவர்களின் அணுகுமுறையையும் யாரும் வாழ்நாளில் மறந்து வாழ முடியாது என தெரிவித்தார். (ந-266)



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வவுனியா கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட *கிறீனியா* எனும் வவுனியா மாவட்ட வரட்சியின் கொடூரம் தொடர்பான செயற்பாட்டின் ஓர் கட்டமாக வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சித்திர மற்றும் புகைப்பட போட்டியின் கண்காட்சி வவுனியா மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இக் கண்காட்சியை மாணவர்கள் பார்வையிடுவதை படத்தில் காணலாம். (படம்: பூந்தோட்டம் செய்தியாளர்)

# 185 பேருந்துகள் அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபட்டு வருகின்றன

## தனியார் போ.வ.சங்க செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வீதி அனுமதிப்பத்திரமற்ற 185 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அனைத்து மாகாண தனியார் பேருந்து சங்கத்தின் செயலாளர் நிஹால் தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

உயர் பொலிஸ் அதிகாரிகள், உயர் இராணுவ அதிகாரிகள், அரசியல் வாதிகள் மற்றும் செல்வாக்குமிக்கோருக்கு சொந்தமான பேருந்துகளே இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.


தூரப் பகுதிகளுக்கான போக்குவரத்து சேவையில் இந்தப் பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சிற்கும் அரசாங்கத்திற்கும் ஏற்கனவே மூன்று தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொத்துவில், மூதூர், மன்னார் ஆகிய நகரங்களுக்கான போக்குவரத்து சேவையில் இந்த பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி சில பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக தேசிய போக்குவரத்து சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் ரொசான் குணவர்தன ஒப்புக் கொண்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா நகரசபையும் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் அண்மையில் வவுனியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அரிமாக் கழகத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையத்தின் தலைவர் சுப்பிரமணியம் உரையாற்றுவதையும் வவுனியா பொது வைத்தியசாலையின் கண்ணியல் நிபுணர் வைத்திய கலாநிதி எம். மலரவன் வெள்ளைப் பிரம்புகளை வலுவிழந்தோர் புனர்வாழ்வு தலைவரிடம் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# 13$^{+}$ என்று கூறிய ஜனாதிபதி இன்று அச்சட்டத்தையே நீக்க முனைகிறார்

## தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடையாது என்கிறார் கிரியெல்ல

(கொழும்பு)

**தேசிய இனப்பிரச்சினைக்கு 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வொன்றினை முன்வைக்கத் தயார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இந்த நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற சிலர் 13 ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென கூறி வருகின்றனர். எனவே இதிலிருந்து இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றினை வழங்கப் போவதில்லை என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைத்த போது தமிழ் மக்களுக்கு அதிகார பரவலாக்கலை ஒரு போதும் வழங்க மாட்டோம் என இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன் வெளிப்பாடே அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் என ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றினை வழங்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இந்த அரசாங்கம் இல்லை. அப்படியான தீர்வொன்றினை வழங்கப்போவதுமில்லை. இதனை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியானது அப்படியல்ல. தமிழ் மக்களுக்கு நிரந்தமான அரசியல் தீர்வொன்றினை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது.

அரசாங்கம் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் இணைந்து பேச்சுவார்த்தையினை நடத்தி தீர்வொன்றுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியான சந்தர்ப்பத்தில் நாம் அதற்கு ஒத்துழைப்பினை வழங்குவோம்.

ஆனால் இந்த அரசாங்கம் பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி வருகின்றது. சர்வ கட்சி குழுவை அமைத்து அதனூடாக நீண்ட பேச்சுக்களையெல்லாம் நடத்தி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவை ஏற்படுத்தி அதனூடாகவும் பல்வேறு பதிவுகளையெல்லாம் மேற்கொண்டது. இதுபோன்று இன்னும் ஏராளமான குழுக்களையமைத்து பேச்சுக்களை நடத்தி பல அறிக்கைகளையெல்லாம் ஆரம்பித்தது.

ஆனால் அவற்றையெல்லாம் குப்பைக் கூடையில் போட்டு விட்டு தற்போது பாராளுமன்ற தெரிவுக்குழுவைப் பற்றி பேசி வருகின்றது. எனவே அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இதயசுத்தியுடன் செயற்படாமல் காலத்தைக் கடத்தி வருகின்றது. அத்தோடு தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் ஒன்றினை முன்வைத்தால் தம்மோடு இருக்கும் பங்காளிக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் போய்விடும்.

அது தமது ஆட்சிக்கு பாதகமாக அமைந்துவிடும் என்ற அச்சத்தினாலேயே அரசாங்கம் இப்படி செய்து வருகின்றது. இந்த அரசாங்கம் தமது தேவைகளை அவ்வப்போது நிறைவு செய்து கொள்வதற்காக ஒன்றைக் கூறுவதும் பின்பு அதனை மாற்றிக் கூறுவதையும் காண முடிகின்றது.

எனவே இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமொன்றை அமைத்து ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# கலைப்பிரிவு மாணவர்களும் தாதியர் பட்டம் பெறலாம்

(கொழும்பு)

உயர்தர கலைப்பிரிவில் பல்கலைக் கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு இனி தாதியர் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுமென உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே உயர்கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டில் சுமார் இரண்டு இலட்சம் தாதியருக்கு வெற்றிடம் நிலவுவதாகவும் இதனால் வெளிவாரி பட்டப்படிப்புக்கான அனுமதியினை மட்டுப்படுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நீக்குவது தொடர்பில் அரசு ஆராய்வு

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்குவது குறித்து அரசாங்கத்திற்குள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டில் பிளவுபடும் நிலை ஏற்பட்டு வருவதாகவும் இதனால் இந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் அரசாங்கத்திலும் அரசாங்க த்திற்கு வெளியில் இருந்தும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதால் அரசாங்கம் இது குறித்து கவனம் செலுத்தி வருவதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்த்தபடியான சேவைகள் மாகாண சபைகள் மூலம் மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதால் அதனை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் மக்களுக்கு சேவைகளை செய்யக் கூடிய வகை யில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா கமலாம்பிகை



மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், இல. 20, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா கமலாம்பிகை அவர்கள் நேற்று முன்தினம் 20.10.2012 (சனிக்கிழமை) இரவு 8.15 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி (வெள்ளையர்) செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமநாதர்-தெய்வானை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி- மருதடியாள் ஆகியோரின் அன்பு மருமகளும், மங்களநாயகி, சுந்தரநாயகி, நாகரட்ணம் (முன்னாள் ஊழியர் தேசிய வீடமைப்பு அதிகார சபை, யாழ்ப்பாணம்,) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மதியாபரணம் (முன்னாள் வேலணை ப.நோ.கூ.ச ஊழியர்), மகாதேவா (வர்த்தகர்), புவிமலர்தேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ் சென்றவர்களான யோகம்மா, முத்துலட்சுமி, இரத்தினவிநாயகர், இராசசேகரம், பாலகணபதி, பரஞ்சோதி மற்றும் படிகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 22.10.2012 (திங்கட்கிழமை) இன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.20, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
0774448760

தகவல்:
மகன் செ.நாகரட்ணம்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களும் இழப்புக்களும் அடைந்த பின்பு மக்கள், அதிக அடக்கத்தையும் அறிவையும் பெறுகின்றனர்.
*– பிராங்ளின்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அழிவுகள் என்ன வடிவில் வரும் என்று எவருக்கும் தெரியாது

யாராலும் அழிக்க முடியாது என்றிருந்த விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இந்த உலகில் எதுவும் எப்போதும் நடக்கலாம் என்பது நம்பிக்கைக் குரிய விடயமாயிற்று.

இப்படி ஒரு நிலை நமக்கு வரலாம் என்று கடுகளவேனும் நினைக்கின்ற தன்மையை விடுதலைப் புலி களின் தலைமை கொண்டிருந்தால் தனித் தமிழீழம் என்ற இலக்கை வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை என்ற பாதையினூடாக எட்டுவதற்கு திட்டம் தீட்டப் பட்டிருக்கும். என்ன செய்வது? எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது.

பரவாயில்லை, இன்று அவர்களுக்கு நாளை நமக்கு என்ற இயற்கையின் தத்துவத்தை நினைந்து அமைதி யடையலாம் என்றால் நாட்டின் ஆட்சியாளர்கள் நடந்து கொள்கின்ற அட்டகாசத்தைப் பார்க்கும் போது அதிகாரத்திலிருக்கும் எவரும் தமக்கும் அழிவு ஏற்படும் என்பதை அறவே மறந்து விடுகிறார்கள் என்று உணர முடியும்.

எதுவாயினும் சிலருக்கான அழிவு என்பது பதவியை இழப்பதினூடாக ஏற்படும். இத்தகையவர்கள் பதவியை இழந்தபின்னர் அரைச்சதத்திற்கும் மதிக்கப்படாமல் தூக்கி எறியப்படுவர்.

இத்தகையவர்களில் முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த குறிப்பிடத் தக்கவர்.

1995–ல் யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றுவதில் அனுருத்தவின் பங்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

விடுதலைப்புலிகளின் கோட்டை என்று புகழப்பட்ட யாழ்ப்பாணத்தை இராணுவம், எக்காலத்திலும் கைப்பற்ற முடியாது என்றிருந்த நிலைமையை முறியடித்து மிக நீண்ட காலத்துக்குப்பின்னர் யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றினர்.

அதன் வெற்றியை கொண்டாடும் வகையில் நாட்டின் தேசியக் கொடியான சிங்கக்கொடியை அனுரத்த ரத்வத்தை யாழ்ப்பாணத்தில் ஏற்றி வைத்தார்.

ஆனால் அவர் பதவியிழந்த பிற்பாடு அவருக்கு நேர்ந்த கதி, அவரின் பிள்ளைகளுக்கு ஏற்பட்ட இழுக்கு என எல்லாமும் சேர்ந்து அனுருத்த என்றால் யார்? என்று கேட்கும் அளவுக்கு அவரை அஸ்தமிக்க வைத்தது.

இது ஒரு வகை. மறுபக்கத்தில் இன்னும் சிலருக்கான அழிவென்பது பதவியிலிருப்பதால் ஏற்படுவது.

அட! இந்தப் பதவி கிடைக்காமல் இருந்திருந்தால் மனுசன் தப்பிப் பிழைத்திருப்பார் என்று கூறுகின்ற நிலைமை தான் இது.

இந்நிலைமை ஏற்படக்கூடிய சாத்தியம் சமகால ஆளுந்தரப்பிற்கு உண்டு.

13–வது திருத்தச்சட்ட மூலத்தை இரத்துச் செய்வது என்று சிந்திக்கும் ஆட்சிக்கு சர்வதேசம் உச்சியில் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆம். அழிவுகள் எந்த வடிவத்தில் வரும் என்று எவரும் அறிந்து கொள்வதில்லை என்று இதைத் தான் குறிப்பிட்டோம்.

# 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் கோத்தாவின் கருத்து கேலிக்குரியது

## டியூ. குணசேகர தெரிவிப்பு

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யக் கூடாது என ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். 13 ஆம் திருத்தச் சட்ட அமுலாக்கமே தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களை களைய வழிகோலியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக அதிகாரங்களை பகிர்வதற்கு ஜனாதிபதி விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் 13 ஆம் திருத்தச் சட்டமூலத்தை இரத்து செய்வதன் மூலம் மீண்டும் தமிழ்ப் பிரிவினை வாதம் தலைதூக்கக் கூடிய அபாயம் நிலவுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்ட கருத்து ஏற்புடையதல்ல.

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் அளவிற்கு அரசாங்கம் தேவையற்ற தீர்மானங்களை எடுக்காது என்றே கருதுகின்றேன். 13 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போது எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு தாம் அதற்கு ஆதரவாக வாக்களித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு காத்திரமான ஓர் மாற்றீட்டு யோசனைத் திட்டம் முன் வைக்கப்படும் வரையில் அதனை இரத்துச் செய்வது புத்தி சாதுரியமான தீர்வாக அமையாது.

மாகாண சபை முறைமை இரத்துச் செய்யப்பட வேண்டும். 13 ஆம் திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் போன்ற கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளில் இலங்கைக்கு பாதக நிலைமை ஏற்படக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ–2)

# அவதியுறும் தமிழ்மக்களுக்கு தீர்வு வழங்காத அரசுடன் பேசமுடியுமா?

## ஐ.ம.முவின் பிரதித் தலைவர் கேள்வி

(கொழும்பு)

பிரதித் தலைவர் ஐ.ம.மு.நியாயமான அரசியல் அதிகாரப் பரவலாக்கலுக்கு தயாரில்லாத அரசு கே.பியை இடைத் தரகராக்கினால் என்ன? புலம்பெயர்ந்த தமிழரோடு பேசினால் என்ன? தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை அடையப் பெறமுடியாது என்பதே உண்மை. நாளும்பொழுதும் இடம் பெறும் அடிப்படை மனித உரிமை மீறல்களால் அவதியுறும் மக்களின் பிரச்சினைகளுக்கு முதற்கண் தீர்வு காணாத அரசுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ தன்மானமுள்ள அரசியற் சக்திகளோ எவ்விதம் பேசமுடியும்? என ஐ.ம.முவின் பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிறையிலுள்ள அரசியற்கைதிகளை குற்றம்சாட்டி நீதிமன்றின் முன்னும் நிறுத்தாததும் அன்றி விடுதலையும் செய்யாது பூசாவிலும் பல்வேறு சிறைச்சாலைகளிலும் அடைத்து வைத்து வஞ்சம் தீர்க்கின்றது அரசு. விடுதலையானவர்கள் நல்வாழ்வு வாழ வழிவகுக்கப்படவில்லை.

ஒவ்வொரு உரிமையையும் வென்றெடுக்க நீதிமன்றம் செல்லவேண்டியுள்ளது.

மீள்குடியேற்றம் என அகதி முகாம்களில் உள்ள அப்பாவிகள் வெறும் காடுகளில் விடப்படுகின்றார்கள். சொந்த நிலங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை. வன்னியில் வாழ்வாங்கு வாழ்ந்த தமிழினம் நிம்மதியாக வாழக் கூடியதாக மீள்குடியேற்றப்படவில்லை.

இராணுவம் மயானங்களையும் தனியார் காணிகளையும் தமதாக்கி முகாம்களை அமைக்கின்றது. மீள் குடியேற்றம் முழுமை பெறவில்லை. ஆனால் இராணுவத்திற்கு வீடுகள் அமைக்கப்படுகின்றன. வடகிழக்கு மக்களின் பிரதிநிதிகளை ஒதுக்கிவிட்டு அபிவிருத்தி என்கிறது அரசு.

அபிவிருத்திக்கு முன்பதாக தமிழ் மக்களை நிம்மதியாக வாழவிடுங்கள் எனும் நிலையில்தான் வடகிழக்கு தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். புலம்பெயர்ந்த தமிழ்மக்களுடன் பேசுவதற்கு முன் அரசு எதைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றது என்பதையே பிரகடனம் செய்ய வேண்டும். (அ–2)

## நவராத்திரி விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் நவராத்திரி விழாவும் சிறுவர்களுக்கான கதைசொல்லும் வேளை நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் வாசகர்கள், சிறுவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ–9–29)

# சேனநாயக்கவின் வழிகாட்டல் தேவை

## கரு ஜயசூரிய தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர் காலத்திற்கு டி.எஸ். சேனநாயக்கவின் வழிகாட்டல் மிக அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் 128ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மீகொடை ஸ்ரீசுமனாராம விகாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கருணாசேன கொடித்துவக்கும் கருத்துத் தெரிவித்தார். (அ–2)

## விவசாயிகளுக்கு கடன்

(நல்லூர்)

வாதரவத்தை விவசாய சம்மேளனத்தை சேர்ந்த 63 விவசாயிகளுக்கு பெரும்போகச் செய்கைக்காக கடன் வழங்கப்படவுள்ளது. ஏற்கெனவே கடன் பெற்று மீளச்செலுத்திய 63பேருக்கும் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் கோப்பாய் இலங்கை வங்கிக்கிளையால் வழங்கப்படவுள்ளது என வாதரவத்தை விவசாய சம்மேளனத்தின் செயலாளர் க.சுந்தரவேல் தெரிவித்துள்ளார். (அ–9–134)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வாழ்வாங்கு வாழ வழி




நாம் வாழும் காலத்தில் உடலையும் மனதையும் சரிப்படுத்திக்கொண்டால், நமக்குப் பின்னாலே பிறக்கக்கூடிய குழந்தைகள் எப்படியிருக்கும் என்று பார்த்தீர்களானால் அவை ஆரோக்கியமான கட்டமைப்புக் (Structure) கொண்டதாகத் திகழும்.

அவ்வாறு நல்ல குழந்தைகளை உலகுக்குத் தருவதற்கு நமது உடற்பயிற்சி, தியான முறை இரண்டும் வாய்ப்பளிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும்போது, ஊதியம் தராத உடற்பயிற்சி, தியானம் இவற்றை முதலில் நிறுத்திவிடலாம் என்று எண்ணாது, உள்ளூர இயங்கி வரும் இறைச்சக்திக்குத் தொண்டு செய்யும் வகையிலே உடற்பயிற்சி, உளப்பயிற்சி செய்து நாளுக்கு நாள் மகிழ்ச்சியும் இனிமையும் பெற்று வாழ வேண்டும்.


தினந்தோறும் நாம் காலையிலிருந்து மாலைவரை குடும்பத்தில் பல வகைப் பொருட்களையும் பண்டங்களையும் கையாளுகின்றோம். சமையற் பாத்திரங்களையே எடுத்துக் கொள்ளுங்களேன். சுத்தப்படுத்தி வைத்தால்தானே அவை மறுநாளைக்கு உதவும்? அதேபோல தினந்தோறும் மனதையும் உடலையும் உபயோகிக்கிறோம். அவற்றில் அவ்வப்போது ஏற்படக்கூடிய களங்கங்களைப்போக்கி மீண்டும் புதிதாக நாளைய உபயோகத்திற்குத் தயாராக வைத்துக்கொண்டால்தானே நன்றாக இருக்கும்?

உடலுக்குக் கொடுக்கக்கூடிய உடற்பயிற்சி, மனதிற்குக்கொடுக்கக்கூடிய தியானப் பயிற்சி, உயிர்க்குறுதி அளிக்கும் காய கல்பப் பயிற்சி இம்மூன்றும் உடலையும் உள்ளத்தையும் உயிரையும் மேன்மைப்படுத்தி, தூய்மைப்படுத்தி மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி வகுப்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேசைப்பந்தாட்டப் போட்டி



கிங்பொங் மேசைப்பந்தாட்ட அக்கடமி நடத்தும் வடக்கு,கிழக்கு பாடசாலைகளுக்கிடையிலான 9 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப் பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த போட்டியாளர்கள் மோகனிடமும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த போட்டியாளர்கள் எஸ். கமலனிடம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த போட்டியாளர்கள் தங்களது மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகளிடம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அவற்றை விரைவில் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# காற்பந்துப் போட்டி



இலங்கை தேசிய காற்பந்தாட்ட அணிக்கு வீரர்களை இணைத்துக் கொள்ளும் செயற்றிட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் காற்பந்தாட்டத் தொடரின் மாவட்டமட்டப் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மாகாணத் தெரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் எதிர்வரும் 31 மற்றும் முதலாம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்ட திரிவுப் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் வவுனியா முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகள் அடுத்தவார இறுதிக்குள் நிறைவடைவதுடன் மாவட்டத் தெரிவு அணிகளுக்கிடையிலான மாகாணமட்டப் போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# உதைபந்தாட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக் 2012 ஆம் ஆண்டுக்கான அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் அம்பாந்தோட்டையில் அண்மையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் 21 வயதுப் பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டலில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வீராங்கனை க.லிகாயினி 66.32 நிமிடங்களில் ஓடி முடித்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தை தட்டிச் சென்றார். (23)

# சைக்கிள் ஓட்டப்போட்டி



தேசிய இளைஞர் சேவை மன்றம் தேசிய இளைஞர் விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தும் தேசிய மட்டத்திலான சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ளது.

மேற்படி சைக்கிள் ஓட்டப் போட்டியில் 29 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்ற முடியும் எனவும் மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீர,வீராங்கனைகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ள முடியும் என யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் அ.ஈஸ்வராஜா தெரிவித்துள்ளார்.

# ரூபவாகினி வெற்றிக்கிண்ணம் யாழ் வசம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் ரூபவாகினி நடத்திய 38 ஆவது ரூபவாகினி வெற்றிக் கிண்ணம் கடந்த 6 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது.

இக்கரப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்தும் ஆண், பெண் அணிகள் கலந்து கொண்டன. ஆண்களுக்கான மூன்றாமிடத்திற்கான போட்டியில் வவுனியா மாவட்ட இளைஞர் கழக அணியும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் கழக அணியும் மோதின.

இதில் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் கழக அணி அபாரமாக ஆடி 25:18 என்ற ரீதியில் முதலாவது சுற்றையும் 25:19 என்ற ரீதியில் இரண்டாம் சுற்றையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை கைப்பற்றினர். தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் கழக A அணியும் யாழ். மாவட்ட இளைஞர் கழக B அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட இளைஞர் கழக Aஅணி அபாரமாக ஆடி முதல் சுற்றை 25:19 என்ற புள்ளியடிப்படையில் கைப்பற்றினர்.


இரண்டாம் சுற்றிலும் சிறப்பாக ஆடி 25:20 என்ற ரீதியில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செட் களில் வெற்றிபெற்று ரூபவாகினி நடத்திய 38 ஆவது கரப்பந்தாட்டத்தின் சம்பியன் பட்டத்தை யாழ். மாவட்ட இளைஞர் கழக A அணியினர் தன்வசப்படுத்தினர்.

பெண்களுக்கான போட்டியின் மூன்றாமிடத்துக்கான போட்டியில் யாழ். மாவட்ட சண்டிலிப்பாய் இளைஞர் கழக அணியும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணியும் மோதின. இதில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக அணி முதற்சுற்றைப் போராடி 26:24 என்ற ரீதியிலும் இரண்டாம்சுற்றை 25:18 என்ற கணக்கிலும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றனர். பெண்களுக்கான இறுதிப்போட்டியில் யாழ். மாவட்ட தெல்லிப்பழை இளைஞர் கழக அணியும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் கழக அணியும் மோதின.

இதில் யாழ்.மாவட்ட தெல்லிப்பழை இளைஞர் கழக அணி இலகுவாக முதற்சுற்றை 25: 18 என்ற இரண்டாம் சுற்றை 25:16 என்ற ரீதியிலும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்று ரூபவாகினி நடத்திய 38 ஆவது கரப்பந்தாட்டத்தின் சம்பியன் பட்டத்தை யாழ். மாவட்ட தெல்லிப்பழை இளைஞர் கழக அணி கைப்பற்றியது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட்;
# மும்பை இந்தியன்ஸை வீழ்த்தியது சென்னை



சம்பியன்ஸ் லீக் தொடரின் நேற்று முன் தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது. மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஜொகன்னஸ்பேர்க், நியூ வென்டரஸ் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

மிகச்சிறந்த ஆரம்ப இணைப்பாட்டமாக 8.1 ஓவர்களில் 86 ஓட்டங்களைக் குவித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, அதன்பின்னர் அதே வேகத்தை தொடர்ந்திருக்க முடியா விட்டாலும் மிகச்சிறப்பான இலக்கொன்றை மும்பை இந்தியன்ஸ் அணிக்கு வழங்கியது.

துடுப்பாட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக டூ பிளெஸிஸ் 33 பந்துகளில் 52 ஓட்டங்களையும், முரளி விஜய் 25 பந்துகளில் 39 ஓட்டங்களையும், மகேந்திரசிங் தோனி 19 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக சிறப்பாக பந்துவீசிய லசித் மலிங்க 4 ஓவர்களில் 32 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தவிர பிரக்ஜன் ஓஜா, டுவைன் ஸ்மித் ஆகியோரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

174 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 4.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 21 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியது.

அதன்பின்னர் இணைப்பாட்டங்கள் பகிரப்பட்டதோடு, தினேஸ் கார்த்திக்கின் சிறப்பான ஆட்டம், இறுதி நேரத்தில் கிரான் பொல்லார்ட் அதிரடியாக ஆடியிருந்த போதிலும், மும்பை இந்தியன்ஸ் அணிக்கு வெற்றி கிடைத்திருக்கவில்லை. அவ்வணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக தினேஸ் கார்த்திக் 45 பந்துகளில் 74 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 26 பந்துகளில் 32 ஓட்டங்களையும், கிரான் பொல்லார்ட் 17 பந்துகளில் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக பென் ஹில்பன்ஹோஸ் 4 ஓவர்களில் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அல்பி மோர்கல் 4 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ரவீந்திர ஜடேஜா 4 ஓவர்களில் 47 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், டூ பிளசீஸ் ஒரு ஓவரில் 3 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஹில்பென்ஹோஸ் தெரிவானார்.

# பெர்த்தை வென்றது டில்லி

சாம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நடைபெற்ற முதல் போட்டியில் டில்லி டேர்டெவில்ஸ்-பெர்த் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி டேர்வில்ஸ் அணித் தலைவர் ஜெயவர்த்தன முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். பெர்த் அணியின் கிப்ஸ்-மார்ஷ் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினார்கள். 6ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிப்ஸ் மோர்கல் பந்தில் கிளீன் போல்டாகி பெவிலியன் திரும்பினார். அடுத்து காடிச் 2-வது விக்கெட்டுக்கு மார்ஷ் உடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் டில்லி அணியின் பந்துவீச்சை நேர்த்தியாக எதிர்கொண்டு ஓட்டங்களை சேர்த்தனர். ஆனால் அவர்களால் அதிரடியாக ஓட்டங்களை குவிக்க முடியவில்லை. 13-வது ஓவரில் மார்ஷ் 39 ஓட்டங்களுடன் அகாகர் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து காடிச் உடன் 3-வது விக்கெட்டுக்கு மிட்செல் மார்ஷ் ஜோடி சேர்ந்தார்.



காடிச் 34 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அகாக்கர் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரோஞ்சி 2 ஓட்டங்களிலும், மார்ஷ் 20 ஓட்டங்களிலும் மோர்கல் பந்தில் ஆட்டமிழந்தனர்.

நார்ஷ் 8, நயில் 2 ஓட்டங்கள் எடுக்க பெர்த் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 121 ஓட்டங்களை எடுத்தது.

122 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி அணி துடுப் பெடுத்தாடக்க களமிறங்கியது.

ஜெயவர்த்தனவும் சேவாக்கும் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினார்கள்.

ஜெயவர்த்தன 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த உன்முக் சந்த் 3, பீற்றர்சன் 9, றெய்லர் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து சேவாக்குடன் பதான் ஜோடி சேர்ந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் விழுந்தாலும் மறுமுனையில் சேவாக் சிறப்பாக விளையாடி அரைச்சதம் கடந்தார்.


டில்லி அணி ஒரு கட்டத்தில் 15 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 94 ஓட்டங்கள் எடுத்திருந்தது. 30 பந்தில் 28 ஓட்டங்கள் எடுக்க வேண்டி இருந்தது. 16 ஆவது ஓவரை றெம்மிங்டன் வீசினார்.

இந்த ஓவரில் பதான், சேவாக் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். பதான் 14, சேவாக் 52 ஓட்டங்களிலும் விக்கெட்டை இழந்தனர்.

இதனால் டில்லி அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது.

9ஆவது நபராக வந்த அகார்க்கர் 7 பந்தில் 11 ஓட்டங்கள் அடிக்க டில்லி அணி 19.3 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

# உலக அணியை வென்றது
# பாகிஸ்தான் நட்சத்திர அணி



பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகளை மீளவும் கொண்டுவருவதற்கு முன்னோடியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உத்தியோக பூர்வமற்ற இருபது-20 தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தானின் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணி வெற்றிபெற்றுள்ளது.

சர்வதேச உலகப் பதினொருவர் அணியை அவ் அணி 84 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

கராச்சி தேசிய மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்களை 6.1 ஓவர்களில் குவித்த அவ் அணி, தொடர்ச்சியாக வேகமாக ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திர பதினொருவர் அணி சார்பாக உமர் அக்மல் 37 பந்துகளில் 67 ஓட்டங்களையும், ஷஷைப் ஹசன் 21 பந்துகளில் 54 ஓட்டங்களையும், இம்ரான் நஷீர் 19 பந்துகளில் 29ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சர்வதேச உலக பதினொருவர் அணி சார்பாக தான்டி ஷபலாலா 3 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஷபூர் ஷட்ரன் 4 ஓவர்களில் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், ஸ்ரீவன் றெய்லர் , அன்ட் ரே நெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

223 ஓட்டங்களை வெற்றி இலக்காக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சர்வதேச உலகப் பதினொருவர் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 84 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது ஓவரில் சனத் ஜெயசூரிய 10 ஓட்டங்களைப்பெற்ற போதிலும் 6வது பந்தில் ஆட்டமிழந்திருந்தார்.

தொடர்ந்து வந்த வீரர்களால் ஓட்டங்களைப் பெற முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் சர்வதேச உலகப் பதினொருவர் அணி சார்பாக ஷபூர் ஷட்ரன் 51 பந்துகளில் 42 ஓட்டங்களையும், லூட்ஸ்பொஸ்மன் 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான்அனைத்து நட்சத்திர பதினொருவர் அணி சார்பாக தபிஷ் கான் 4 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வகாப் றியாஷ் 3 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், அன்வர் அலி, ஷகிட் அப்ரிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக உமர் அக்மல் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பிரிவில் படித்தவர்களுக்கு தாதியர் பட்டம் பெற வாய்ப்புக்கள்

## அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

(கண்டி)

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் கலைப்பிரிவில் அனுமதி பெறும் மாணவர்களுக்கும் எதிர்காலத்தில் தாதியர் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவிருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற வைபவமொன்றில் இந்த தகவல்களை வெளியிட்ட அவர், நாட்டிற்கும், உலகிற்கும் தேவையான பட்டப் படிப்புகளை பல்கலைக்கழகங்களில் வழங்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

இலங்கையில் தற்போது சுமார் இரண்டு லட்சம் தாதியர் வெற்றிடங்கள் நிலவுவதாக சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க, கலைப்பிரிவில் அனுமதி பெறும் மாணவர்களுக்கு அறிவியல் பாடங்களான தாவரவியல், இரசாயனவியல் போன்ற விடயங்கள் தொடர்பான அடிப்படை பாடங்களை சொல்லிக் கொடுத்துவிட்டு பின்னர் அவர்கள் தாதியர் பட்டப்படிப்பை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படும் என்றும் அவர் கூறுகின்றார்.

அரசாங்க மருத்துவர்கள் மத்தியில் இதற்கு எதிர்ப்புகள் காணப்பட்டாலும் பரவாயில்லை என்றும் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கூறினார்.

அமைச்சரின் இந்தத் தீர்மானத்தை வரவேற்றுள்ள அரசாங்க தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய இதில் சில பிரச்சினைகள் இருப்பதாகவும் கூறுகின்றார்.

தற்போதுள்ள நடைமுறையில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் அறிவியல் பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இஸட் ஸ்கோர் புள்ளிகள் அடிப்படையில் தாதியர் பட்டப்படிப்பிற்கு தெரிவாகின்றனர்.

அமைச்சரின் இந்தத் தீர்மானம் காரணமாக ஆட்சேர்ப்பு தொடர்பான அடிப்படை கல்வி தகுதிகளில் சிக்கல்கள் ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி ஏற்கெனவே கலைப்பிரிவில் கல்வி கற்ற மாணவர்கள் தாதியர் பட்டப் படிப்பிற்காக விஞ்ஞான பாடத்துடன் தொடர்புடைய விதானங்களை கிரகிக்க முடியுமா என்ற சிக்கலும் இருக்கவே செய்கிறது என்றார் சமன் ரத்தினப்பிரிய.

இலங்கையில் தற்போது க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தவர்களே பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் தாதியர் பட்டப்படிப்பிற்கும், தாதிய பயிற்சிக் கல்லூரிகளில் டிப்ளோமா பாடநெறிக்கும் தெரிவாகும் வாய்ப்பை பெறுகின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஒரே தடவையில் 7 ஆயிரம் பாரை மீன்கள் ஒரு கடற்றொழிலாளியிடம் சிக்கின!

(கொழும்பு)

ஒலுவில் பிரதேசத்தில் கடற்றொழிலாளி ஒருவருக்கு சொந்தமான தோணிகளுக்கு ஒரே தடவையில் சுமார் 7 ஆயிரம் பாரை மீன்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சிக்கின.

ஒவ்வொன்றும் 6 முதல் 7 கிலோ கிராம்

டாளைச் சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச் சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய பகுதிகளில் மிகப் பெருமளவான சூரை மீன்கள் சிக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின்



எடைய இந்த மீன்களின் மொத்தப் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த பிரதேச வரலாற்றில் இவ்வாறு அதிகளவான மீன்கள் பிடி பட்டமை இதுவே முதல் தடவை என இங்குள்ள மீனவர்கள் கூறுகின்றனர்.

சாதாரண நாட்களில் 7 கிலோக்கிராம் எடைய பாரை மீனொன்று சுமார் 2 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவில்லாமல் விற்கப்படும் நிலையில் நேற்றையதினம் ஆயிரத்து 300 முதல் ஆயிரத்து 500 ரூபாய் வரையிலேயே விற்கப்பட்டன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அட்

கடந்த 10 நாட்களாக பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்கள் பிடிபடுகின்ற நிலையில் ஒத்தாச்சிமடம் கடற்கரையிலும் இந் நிலை தொடர்கின்றது.

மீன்கள் கரையொதுங்குவதை நேரடியாகக் காண்பதற்கு பல நூற்றுக்கணக்கான மக்கள் கடற்கரைக்கு வந்து செல்கின்றனர்.

கரை ஒதுங்கும் மீன்கள் ஒருபுறம் இருக்க கரைவலை மூலம் பிடிபடுகின்ற மீன்களும் ஏராளமாக இருக்கின்றன. அளவுக்கு மிஞ்சிய மீன்கள் பிடிபடுவதனால் சந்தைப்படுத்தலில் சிக்கல் நிலையை மீனவர்கள் எதிர் நோக்குகின்றனர். (எ-11)

## இலங்கையின் அறிக்...

ஸ்பெய்ன், கனடா, மெக்சிக்கோ, பிரித்தானியா, அமெரிக்கா, செக்குடியரசு, நெதர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகள் இலங்கையின் அறிக்கை தொடர்பாக ஏற்கெனவே கேள்விகளை எழுப்பியுள்ளன.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் தாமதிக்கப்படுவது, உயர்பாதுகாப்பு வலயங்கள், ஊடகவியலாளர்களுக்கான அச்சுறுத்தல்கள், 2006-ல் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படாமை.

மூதூரில் 17 பிரெஞ்ச் தொண்டர் நிறுவனப் பணியாளர்களின் படுகொலை, சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை, கேலிச்சித்திர ஓவியர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை உள்ளிட்ட சம்பவங்கள், இந்த நாடுகள் கரிசனை வெளியிட்டுள்ளன.

சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோரைப் பாதுகாப்பதற்கான சட்டமூலம், சனல் 4 காணொளி தொடர்பான விசாரணை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான இருதரப்பு பேச்சுக்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்த முன்னேற்றமும் ஏற்படாமை ஆகிய விடயங்கள் குறித்து அமெரிக்கா கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிட்டத்தில், உள்ளடக்கப்படாத பரிந்துரைகளின் நிலை என்ன என்று அமெரிக்காவும் பிரித்தானியாவும் கேள்விகளை எழுப்பியுள்ளன.

உள்நாட்டுப் போரின் போது, இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக ஒரு முறைப்படியான சுதந்திர விசாரணை நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசாங்கம் எப்போது பொறுப்புக்கூறப் போகிறது என்று கனேடிய அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது. (எ-11)

## திவிநெகும சட்ட மூல...

முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அதன்பொருட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையில் குறித்த சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது அதற்கு மேலும் கால அவகாசம் கோருமாறு முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்களிடம் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இருந்தபோதும் கட்சித் தலைமையின் உத்தரவையும் மீறிய மாகாணசபை உறுப்பினர்கள் அந்த சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித் திருந்தனர்.

இதன் காரணமாகவே அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொது செயலாளர் ஹசன் அலி கூறியுள்ளார். (எ-11)

## இலங்கை மனிதவுரிமை...

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன் வைக்கும் நடவடிக்கைகளில் ரஷ்யாவும் சீனாவும் ஒத்துழைப்பு வழங்க வில்லையென அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதி மன்றில் நடவடிக்கை எடுக்கக் கூடிய சாத்தியம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றதென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்நாட்டு பிணக்குகளில் சர்வதேச சக்திகள் தலையீடு செய்வது ஏற்புடையதல்ல என இலங்கை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

உள்நாட்டு, சர்வதேச பிணக்குகளுக்கு அமைதியான வழிகளில் பேச்சுவார்த்தை அடிப்படையில் தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப்பிரதிநிதி டாக்டர் பாலித கோஹன்ன தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 13ஆவது...

திவிநெகும சட்டத்தை தோற்கடிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் மூலம் இந்த சதித்திட்டம் அம்பலமாகியுள்ளது. எனவே இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என விமல் வீரவன்ச கோரியுள்ளார். (எ-11)

## ஜனாதிபதிக்...

சகாக்களின் அமைச்சுக்களுக்குமான நிதி ஒதுக்கீட்டிலும் அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

மகிந்தவின் குடும்பம் மற்றும் சகாக்களுடன் தொடர்புடைய அமைச்சுகளுக்குமாக அடுத்த வருடத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி விபரங்கள் வருமாறு,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 740 கோடி ரூபாய். பாதுகாப்பு அமைச்சு கோத்தபாய ராஜபக்ஷ 29 ஆயிரம் கோடி ரூபாய். துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு (நாமல் ராஜபக்ஷ கட்டுப்பாடு) 13 ஆயிரத்து 161 கோடி ரூபாய். நிதி திட்டமிடல் அமைச்சு (மகிந்த ராஜபக்ஷ அமைச்சு) 8 ஆயிரத்து 746 கோடி ரூபாய். பொருளாதார அபிவிருத்தி அமைச்சு (பஷில் ராஜபக்ஷ) 8 ஆயிரத்து 890 கோடி ரூபாய்.

இதன்படி மொத்தமாக மகிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்காக 2013 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் சுமார் 61 ஆயிரம் கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (எ-11)

## ஜனாதிபதி...

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் தலைமை காரியாலயத்திற்கு வெளியில் முதற் தடவை யாக நடைபெறும் இந்த மாநாட்டில் 15 நாடுகளின் அரச தலைவர்களும் 40 சக்தி தொடர்பான அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஹஜ் யாத்திரை...

மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம்முறை இலங்கையிலிருந்து அதிகளவான ஹாஜிகள் புனித நகருக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நவுரு தீவி...

வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு இடையிலான இன முரண்பாட்டை தணிப்பதற்கான நடவடிக்கைகளை அவுஸ் திரேலிய குடிவரவு திணைக்கள அதிகாரிகளும், சட்டத்தரணிகளும் மேற்கொண்டு வருவதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏற்கெனவே கிறிஸ்மஸ் தீவிலும் இவ்வாறான மோதல்கள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அரசுடன்...

தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன தாக்கப்பட்டமையை கண்டிப்பதாக தெரிவித்த அவர் சுயாதீன நீதித்துறை மற்றும் சட்டவாக்கம் ஆகியவற்றின் சுயாதீன செயற்பாடுகளின் உறுதி தொடர்பில் தீர்மானிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்குமாறும் ஆலோசனை வழங்கினார். (எ-11)

இணையத்தில் சுயமாக வேலை செய்வதற்கு
Part Time மாதம் ஒரு லட்சம் (Rs 100,000/-) வரை Full Time
Data Entry, Web Designing, Face Book, Copy Typing, Photoshop. C++, Java, Accounting.... உட்பட 300க்கும் மேற்பட்ட வேலைகள்.
ONLINE JOBS
International Master Card, வேலை விளக்கம்.
ACS
Tel:077-3967334 / 077-0071835
கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சந்தியில் இருந்து 100 m தொலைவில். (801)

மணல் விற்பனைக்குண்டு
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 19,500/-
தொடர்புகளுக்கு
ரமேஸ்
0722694462
(802)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org